# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 | விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, கார்த். 17 உ (2-12-73) ஞாயிறு ஜுலகஸ: ஆகிர் 6—புத்தகம் 27 இதழ் 14


**இடி**

போரிடும் வாழ்க்கை ஒன்றை
பொங்கிடும் தமிழர் கூட்டம்
நேரிடக் கண்டும் மீளா
நித்திரை கொண்ட தேனே
ஆரிடம் சொல்வோம் மன்னா
அழகர் கோன் போனதெங்கே
பீறிடும் நெஞ்சம் பின்னும்
பெருமிடி கண்ட தைய!

*சரவணையூர் வே. இராசலிங்கம்*

### தலைவர்களும் தொண்டர்களும் பொதுமக்களும் கண் கலங்கி நிற்க

# அமரர் அழகக்கோனின் பூதவுடல் நல்லடக்கம்!

## மாதோட்டத்தின் மாணிக்கத்தை நிலமகள் அணைத்துக் கொண்ட சோகக்காட்சி

## தமிழ் ஈழம் முழுவதும் துயர வெள்ளம்!



தமிழரசுக்கட்சித் தலைவர்களும், பிரமுகர்களும், தேசிய பேரவை உறுப்பினர்களும் தங்கள் உற்ற நண்பனைப் பிரிந்த துயரத்தினால் கண்கலங்கி நிற்க —தங்கள் தலைவனைப் பிரிந்த துயரத்தினால் கட்சித்தொண்டர்களும், கட்சி சார்பற்ற தமிழ் பொதுமக்களும் அழுதுபுலம்ப — மன்னாரின் முத்து—மாதோட்டத்தின் மாணிக்கம்—அமரர் வி. ஏ. அழகக்கோன் அவர்களின் பூதவுடல் 28-11-73 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னாரின் பாராளுமன்ற உறுப்பினராகவும், தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவராகவும் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இருந்து வழிகாட்டிய தங்கள் அருமைத் தலைவரைப் பிரிந்த துக்கம் தாளாது. மன்னார் மாவட்ட தமிழ் மக்கள் கதறியழுத காட்சி கல்லையும் உருக வைக்கக்கூடியதாக இருந்தது.

### பொதுமக்கள் அஞ்சலி

மன்னார் பொது மயானத்தில் அமரர் அழகக்கோனின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்காக ஊர்வலமாக எடுத்துவரப்படுவதற்குமுன்னர், காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை பொதுமக்களின் அஞ்சலிக்காக மன்னார் பட்டின சபை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தபோது, தமிழ் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மன்னாருக்கு வந்து குவிந்திருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வழிந்தோடும் கண்ணீருடன் அமரருக்கு தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

இறக்கும்வரை கொள்கை மாறாத இலட்சிய வாதியாக வாழ்ந்த அமரர் அழகக்கோனின் பூதவுடல் தமிழரசுக்கட்சியின் மூவர்ணக் கொடியினால் போர்த்தப்பட்டிருந்தது.

### துயரவெள்ளம்!

தமிழரசுக் கட்சியின் பா.உ.க்களும், முக்கிய பிரமுகர்களும் தலைவர்களும், அமரராகிவிட்ட தங்கள் நெருங்கிய சகாவான அழகக்கோனின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் கவலைதோய்ந்த முகத்தினராய் அமர்ந்திருக்க காணப்பட்டனர்.

மன்னார் மாவட்டம் முழுவதும் கடைகள் யாவும் பூட்டப்பட்டு, கறுப்பு, வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டு பூரண துக்கம் அனுட்டிக்கப்பட்டது.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25-11-73) இரவு திடீரென காலமான திரு அழகக்கோனின் பூதவுடல், திங்கள் இரவு 11 மணியளவில் அவரது தொகுதியான மன்னாருக்கு எடுத்துவரப்பட்டபோது — மடுவிலிருந்து மன்னார்வரை வழி நெடுகிலும் பெருந்திரளான மக்கள் திரண்டு நின்று கண்ணீர் வழிந்தோட, தங்கள் தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

### ஒற்றுமை உணர்வு

கத்தோலிக்க மதத்தினரான அமரர் அழகக்கோனின் இறுதி அஞ்சலியிலும், இறுதி யாத்திரையிலும், இந்து கிறிஸ்தவ, இஸ்லாமியர் என்ற மத வேறுபாடு ஏதுமின்றி தமிழ்பேசும் மக்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்ட காட்சி—அமரர் அழகக்கோன் தமிழரசுக்கட்சி மூலம் வளர்த்து வந்த ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது.

### இறுதி ஊர்வலம்

மன்னார் பட்டினசபை மண்டபத்திலிருந்து பிற்பகல் மூன்று மணியளவில் ஆரம்பித்த அமரர் அழகக்கோனின் இறுதியாத்திரையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கலந்துகொண்டு தங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

### 'சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள்

# சித்திரவதை!'

## தேசிய அரசுப் பேரவையில்

### உடுவில் பா. உ. குற்றச்சாட்டு!

"தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், சிறையில் வாழும் பரிதாபமான சூழ்நிலை பற்றியும் அவர்களுக்கு செய்யப்படும் சித்திரவதை பற்றியும் இந்தச் சபையில் பலமுறை நான் புகார் செய்து இருக்கிறேன்.

"நீர்கொழும்புச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் சேனதிராசா என்ற இளைஞருக்கு நடந்த பல கொடுமைகள் பற்றி கூறியிருக்கிறேன். ஆனல அது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையையும் நீங்கள் எடுக்கவில்லை.

"உதாரணமாக, சேனதிராஜாவுக்கு சி. ஐ. டி. அதிகாரிகள் மிருகத்தனமாக அடித்தது பற்றி கூறியிருக்கிறேன். அவரை விசாரிப்பதற்காக, நீர்கொழும்பு சிறையிலிருந்து 4வது மாடிக்கு சி. ஐ. டி. அதிகாரிகள் கூட்டி வந்து, அடித்து, சித்திரவதை செய்து, அதனல் ஏற்பட்ட காயங்கள் ஆறும் வரை, பொலிஸ் ஸ்டேசனிலே அடைத்து வைத்திருந்துவிட்டு, மீண்டும் நீர்கொழும்பில்கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள்.

"தாம் சி. ஐ. டி யினரால் தாக்கப்பட்டது சம்பந்தமாக சேனதிராஜா, முறைப்பாடு ஒன்றை சிறைச்சாலையதிகாரிக்கு உடனடியாக கொடுத்திருக்கிறார். அந்த முறைப்பாட்டை, பாதுகாப்பு துணை அமைச்சர் இச் சபையிலே பகிரங்கமாக சமர்ப்பிப்பாரா?

"பொலிசார், தாமாகவே எதையோ எழுதி வைத்துவிட்டு, அதில் கையெழுத்திடும்படி வற்புறுத்தியே சேனதிராசாவை அடித்துத்துன்புறுத்தி யிருக்கிறார்கள். சித்திரவதை தாங்காமல், அவர் அதில் கையெழுத்திட்டாரோ என்னவோ தெரியாது.

"சேனதிராசாவால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை - சிறைமேலதிகாரி பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பினரா? அதற்கு பொலிஸ் மா அதிபர் எடுத்த நடவடிக்கை என்ன? சேனதிராசாவின் புகாரில், இரகசிய பொலீசாருக்கு எதிராக பாரதூரமான கிறிமினல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளனவா! அப்படியானல், அட்டோனி ஜென

(5-ம் பக்கம் பார்க்க)

### முருகையா சம்பவத்துக்கு அரசியல் பூச்சு!

"அரசாங்கக் கட்சி ஆதரவாளர் என்று சொல்லப்படும் முருகையா என்பவர் அண்மையில சுடப்பட்டதாக கூறப்பட்டது. ஆனல், இவர் சுடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், இவரிடம் வாக்குமூலம் எடுப்பதற்காக இரண்டுமுறை பொலீசார் சென்றும், வாக்குமூலம் கொடுக்க இவர் மறுத்துவிட்டார். இதன் பின், கொழும்பிலிருந்து குமாரசூரியர் விசேட விமானத்தில் சென்று அவரைப் பார்த்தார். அதன்பின்பே பொலீசாருக்கு அவர் வாக்குமூலம் கொடுத்தார். இச் சம்பவத்துக்கு அரசியல் வர்ணம் பூசும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது."

—வி. தர்மலிங்கம் பா. உ.
(தேசிய பேரவையில் 28-11-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சிந்தனைகள்!

திரு. டொமினிக் ஜீவாவை ஆசிரியராகக் கொண்ட 'மல்லிகை'யின் 'ஒன்பதாவது' ஆண்டு மலர் இந்த ஆண்டு 1973 ஆகஸ்டில் வெளியாகியிருக்கிறது. இலங்கையிலே தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதென்பது பெரிய சாதனைதான். நூற்றுக்கணக்கான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்த நாட்டில் வெளிவந்துவிட்டன. அவற்றுட் பல, அவை அச்சிட்ட மை காய முன்னரே மடிந்துவிட்டன. சில, இரண்டு, மூன்று ஆண்டுகள் 'முக்கித் தக்கி' இழுத்துவிட்டு, கடைசியில் மூச்சை விட்டுவிட்டன. இந்தப் பொதுவிதிக்கு விலக்காக இரண்டொன்று இருந்தபோதிலும், தமிழ்ச் சஞ்சிகை எதுவும் நீடித்து நிலைக்க முடியாமற் போவது, இந்த மண்ணின் சாபக்கேடு என்றுதான் சொல்ல வேண்டும்.

'இந்த நிலையில், 'மல்லிகை' 'ஒன்பதாவது' ஆண்டு மலரை வெளியிடுகிறதென்றால், அதைப் பாராட்டத்தானே வேண்டும்? ஆனால், வாசகர்களையும் விமர்சகர்களையும் 'குட்டி' முந்திக்கொண்டு, ஜீவாவே தன் சாதனைக்காகத் தன்னைப் பாராட்டத் தொடங்கிவிடுகிறாரே, அதைத்தான் என்றால் சகிக்கமுடியவில்லை. பத்திரிகையிலேயே தன்னைப் பக்கம் பக்கமாகப்பாராட்டி எழுதாவிட்டால், வேறு எங்கேதான் அப்படி எழுத முடியும்? போகட்டும்.

'மல்லிகை'யின் இந்த 'நீடித்த' ஆயுளுக்குக் காரணம் என்ன?

இப்போது சில காலமாக, மாதத்துக்கு மாதம் ஜீவா எழுதிவரும் குறிப்புக்களிலிருந்து அவர் சொல்லும் காரணங்களை இப்படிச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்:-

— மல்லிகையின் அபார வளர்ச்சிக்கு — வெற்றிக்கு காரணம் தன்னுடைய (ஜீவாவினுடைய) இடைவிடா முயற்சி; உழைப்பு; தன்னுடைய இலக்கியப் 'பார்வை' ஒரு 'முற்போக்கு' எழுத்தாளனுடையதான் — 'முற்போக்கு' இயக்கத்தால்தான் இப்படி ஒரு சாதனையை இந்த நாட்டில் நிகழ்த்த முடியும்!

இவை அவரே சொல்லும் காரணங்கள்.

ஜீவாவின் உழைப்பைப் பற்றி யாருமே சந்தேகப்படமாட்டார்கள்.

ஆனால், தன் இலக்கியப் பார்வை, முற்போக்கு இயக்கம் என்றெல்லாம் சொல்கிறாரே, இவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா?

'ஈழகேசரி' என்ற வார இதழ் சுன்னாகத்திலிருந்து வெளிவந்து இலக்கியத் தொண்டு செய்தது. 'ஈழகேசரி' உருவாக்கிய எழுத்தாளர்கள் பலர், இன்று நவீன இலக்கியம் பற்றி ஈழ நாட்டினர் தலைநிமிர்ந்து பேசுகின்றார்கள் என்றால், இந்த நிலைக்கு அத்திவாரமிட்டது 'ஈழகேசரி'தான் இப்பத்திரிகை எத்தனை ஆண்டுகள் வெளிவந்தது தெரியுமா? இருபத்தெட்டு ஆண்டுகள்! ஆமாம், 1930 முதல் 1958 வரை — கால் நூற்றாண்டுக்கு மேலாக வெளிவந்தது 'ஈழகேசரி' ஆனால் இந்தப் பத்திரிகைக்கு 'ஜீவாவின் தற்புகழ்ச்சித்' தொனி என்றுமே இருந்ததில்லை.

'ஈழகேசரி'யை நிறுவி, முதல் எட்டு ஆண்டுகள் வரை அதன் ஆசிரியராகவும் இருந்த நா. பொன்னையா ஒரு பெரிய முற்போக்காளன்! ஆனால் ஜீவா 'முற்போக்கு' என்பதற்குக் கூறும் கருத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் நா. பொன்னையா ஒரு படு பிற்போக்கு வாதி — காந்தியவாதி; (சமீபத்தில் வதிரியில் நடைபெற்ற நாவல் அறிமுக விழா வொன்றில் காந்தீயத்தைக் கிண்டல் பண்ணி மகிழ்ச்சியடைந்தவர் ஜீவா) இந்தப் 'பிற்போக்கு வாதி'யின் 'ஈழகேசரி' இருபத்தெட்டு ஆண்டுகள் இந்த மண்ணில் நிலைத்து நின்று இலக்கியத்தை வளர்த்தது என்பதை ஜீவா ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது!

'சிரித்திரன்' என்றொரு மாத இதழ் பத்து ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றது. சென்ற மாதம் அதன் பத்தாண்டு நிறைவு மலரும் சிறப்பாக வெளியானது. நகைச்சுவை — சிறுகதை — நாவல் — புதுக்கவிதை ஆகிய துறைகளில் கணிக்கத்தக்க சாதனை நிகழ்த்தியிருக்கிறது 'சிரித்திரன்' இலங்கையிலிருந்து வெளியாகும் மாத இதழ்களில் அதிக அளவு விற்பனையாவது 'சிரித்திரன்' தான். 'மல்லிகை'யின் விற்பனையை விட எட்டு மடங்கு அதிக விற்பனை உடையது 'சிரித்திரன்' இப்படியான பெருமைக்குரிய 'சிரித்திரன்' 'முற்போக்கு' இயக்கத்தைச் சார்ந்ததல்ல; அதன் ஆசிரியர் சுந்தர் ஒரு 'முற்போக்கு' முத்திரை குத்தப்பட்ட எழுத்தாளருமில்லை;

'முற்போக்கு' இயக்கத்தினால்தான் நல்ல பத்திரிகையை வெற்றிகரமாக வெளியிடமுடியும் என்ற ஜீவாவின் ஆதாரமற்ற, தான்தோன்றித்தனமான கூற்றை ''ஈழகேசரி'' முன்னரே பொய்ப்பித்துவிட்டதென்றால், இப்போதைய ''சிரித்திரன்'' அக்கூற்றை மாதாமாதம் தவிடுபொடியாக்கி வருகின்றது.

ஜீவா கூறிவரும் ''மல்லிகை''யின் வயதுக்கணக்கை, வாதத்துக்காக நான் சரியென ஏற்றுக்கொண்டு ஜீவா சொல்லும் காரணங்கள் தவறானவை, உண்மைக்கு மாறானவை என்பதை இதுவரை விளக்கினேன். இனி, மிகவும் முக்கியமான ஒரு விஷயத்துக்கு வருகிறேன்.

''மல்லிகை''யின் உண்மையான வயது என்ன? ஒன்பதாவது ஆண்டு மலரை வெளியிடும் தகுதி — பக்குவம் — அதற்கு உண்டா?

''மல்லிகை''யின் முதலாவது இதழ் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியானது. சில இதழ்கள் வெளியான பின், கிட்டத்தட்ட ஓராண்டு காலம், மல்லிகை வெளிவரவேயில்லை. இந்த இடை வெளிக்குப்பின், மீண்டும் வெளிவரத் தொடங்கிய மல்லிகை, உண்மையில் ஆறு ஆண்டுகளைத்தான் பூர்த்தி செய்தது. ஆகவே, 1973 ஆகஸ்டில் வெளிவந்திருக்க வேண்டியது ஆறாவது ஆண்டு மலர்தான்; ஒன்பதாம் ஆண்டு மலர் அல்ல. ஆனால் ஜீவா வெளியிட்டிருப்பதோ ''ஒன்பதாவது'' ஆண்டு மலர்!

இப்படித் திடீரென்று ஆறிலிருந்து ஒன்பதுக்குப்பாய்ந்ததன் காரணம் என்ன?

இந்த நாட்டின் இலக்கிய வரலாற்றில் அக்கறை உடையவர்கள், இந்த வரலாற்றுப் 'புரட்டை' நிச்சயம் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும். ''மல்லிகை, சில நூறு பிரதிகள்தானே விற்பனையாகின்றன. ஜீவா எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும்'' என்று அசண்டையாக இருந்துவிடக் கூடாது.

எஸ். பொ. போன்ற 'உள் விஷயம்' தெரிந்த சில எழுத்தாளர்கள் ஜீவாவின் 'டுப்' புக்களையும் வண்டவாளங்களையும் அடிக்கடி பட்டியல் தயாரித்து வெளியிடுவதும் 'என் வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைகொண்டு இப்படி அவதூறு சுமத்துகிறார்கள்' என ஜீவா பரிதாபமாகச் சமாதானம் கூறுவதும் இலக்கிய இரசிகர்கள் அறிந்த சங்கதிகள். அப்படியான பட்டியல்களில் ஜீவாவின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய சில விஷயங்களும் இடம்பெறுவதால், அவை உண்மையா இல்லையா என்பதை ஆராய்ந்து அறிய அவகாசமில்லாதவர்கள் ஜீவாவின் சமாதானத்தை ஏற்றுக்கொள்வதுமுண்டு.

ஆனால் இந்த 'ஒன்பதாம்' ஆண்டு மலர் அப்படிப்பட்டதல்ல.

எதையுமே திட்டமிட்டுச் செய்யும் ஜீவா இந்த மூன்று ஆண்டுகளையும் அநாயாசமாக உருட்டித் தள்ளியதற்கு உள்ளார்ந்த நோக்கம் ஒன்று இருக்கவேண்டும்!

வெறும் கூட்டல், கழித்தல் கணக்கு ஜீவாவுக்குத் தெரியாது என்பதல்ல எனது வாதம். 'திட்டமிட்டு' என்பதையும் அர்த்தபூர்வமாகத்தான் உபயோகித்துள்ளேன்.

'ஏழாவதாண்டைப் பூர்த்தி செய்து இந்த இதழுடன் எட்டாவதாண்டை எட்டிப்பார்க்கும் மல்லிகைக் குழந்தை...' என்று எட்டாவது ஆண்டுமலரில் எழுதியிருக்கிறார் ஜீவா. ஏழாவது ஆண்டைச் பூர்த்திசெய்யும் போது ஏழாவது ஆண்டுமலரல்லவா வெளியாகவேண்டும்?'ஏழாவதாண்டைப் பூர்த்திசெய்து' என்பதே பிழையானது. 'ஐந்தாவதாண்டைப் பூர்த்தி செய்து' என்பதுதான் சரி.

இதே கட்டுரையில் ஜீவா தொடர்ந்து எழுதுகிறார், 'மல்லிகையில் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவந்துள்ள...'

'இந்த எட்டாண்டுகளில் தனிப்பட்ட முறையில்...'

கட்டுரையின் ஆரம்பத்தில் 'ஏழாவதாண்டைப் பூர்த்தி செய்து' என்ற அப்பட்டமான பொய்யை எழுதியவர், கட்டுரையின் நடுப்பகுதியில், எட்டாண்டைப் பூர்த்தி செய்துவிட்டது' என்ற பொய்யை நைசாகப் புகுத்திவிட்டார்!

1972ல் 'எட்டாவது' ஆண்டு மலரைப் பார்த்த வாசகர்கள் 1973ல் 'ஒன்பதாவது' ஆண்டுமலரைப் பார்க்கும்போது, இவற்றின் பின்னணியில் ஜீவாவின் 'இலக்கிய — வரலாற்றுப் புரட்டு' ஒன்று மறைந்திருக்கின்றது என்பதை அறியத்தான் மாட்டார்கள்.

இப்போது இந்தப் 'புரட்டை' நாம் அம்பலப்படுத்தாவிட்டால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் 'மல்லிகை'யின் 'பதினைந்தாவது' ஆண்டுமலர் வெளியாகிவிடும்! அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளுள் வெள்ளி விழா மலரும் வெளியாகிவிடும்!

எதையுமே மேலெழுந்தவாரியாக நோக்காமல், ஆழ்ந்து அலசவேண்டும் என மற்றையவர்களுக்கு உபதேசம் செய்யும் கவிஞர் முருகையன், மல்லிகையின் 25 ஆண்டு இலக்கியச் சேவை பற்றி நுனிப்புல் மேய்வார்! கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகம், வெள்ளி விழா மலரை விமர்சனம் செய்து, கூட்ட அறிக்கையை மல்லிகைக்கே அனுப்பி வைக்கும்! இந்த நாட்டில் வெள்ளி விழா மலரை வெளியிட ஒரு முற்போக்கு இலக்கியகாரனாலேதான் முடியும் என ஜீவாவும் கொக்கரிப்பார்!

இத்தகைய புருடாக்களைத் தவிர்ப்பதற்காகவே, ஜீவாவின் இந்தத் 'தப்புக் கணக்கை' இப்போது அம்பலப்படுத்துகின்றேன.

பொறுப்புணர்ச்சியுடைய ஒரு பத்திரிகை ஆசிரியன், இதற்கு விளக்கம் தர, வாசகர்களிடம் மன்னிப்புக் கோரக் கடமைப்பட்டவன். 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா எத்தகையவர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

—இலக்கியச் சிந்தன்.

# இந்திய புத்தக இறக்குமதி!

இந்திய தமிழ் புத்தகங்கள், சஞ்சிகைகள் இறக்குமதி சம்பந்தமாக மேலும் சில கருத்துக்களை இங்கு தெரிவிக்க விரும்புகிறோம்;

(1) ஏனைய வெளிநாடுகளிலிருந்து 42 இலட்சம் ரூபாவுக்கு சஞ்சிகைகள், புத்தகங்கள் இறக்குமதிசெய்யப்படுகின்றன; அதே வேளையில் இந்தியாவிலிருந்து ஆக ஏழு இலட்சம் ருபாவுக்கே நூல்கள், சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன; 42 இலட்ச ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் புத்தக இறக்குமதி பற்றி எதுவும் பேசாமல் — இந்திய புத்தக இறக்குமதிக்கு செலவிடும் ஏழு இலட்சம் ரூபாவை மட்டுமே பெரிதுபடுத்தி அதைத்தடைசெய்ய முயற்சிப்பதேன்; ஏன் இந்த இந்திய துவேஷம் என்று கேட்டிருக்கிறார் கம்யூனிஸ்ட் சார்புதொழிற் சங்கமான ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. நடேசன்! இந்தக் கேள்வியை திரு. நடேசனுடன் சேர்ந்து நாமும் கேட்க விரும்புகிறோம்!

வெளிநாடுகளிலிருந்து எத்தனையோ பச்சை ஆபாசக் குப்பைகள் — பாலுணர்வு ஏடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவை பற்றி மூச்சுக் காட்டாமல், இந்தியப் பத்திரிகைகளை மட்டும் கட்டுப்படுத்த முன்னிற்பது — ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள கலாசார தொடர்பை துண்டிக்கும் முயற்சியன்றி வேறென்ன?

(2) 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் — கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்றார் பாரதியார். எனவே நமக்குத் தேவையான அறிவு நூல்களை, கலாசார இலக்கிய மத சம்பந்தப்பட்ட நூல்களை தருவிப்பதில் வர்த்தகக்கண்ணோட்டம் இருப்பது அறவே பொருத்தமானதல்ல! நமக்கு வேண்டிய அறிவு நூல்களை, இலக்கிய சஞ்சிகைகளை, எங்கிருந்தாலும் நாமாகவே தருவித்துப் படிப்பது நமது அறிவு வளர்ச்சிக்கு தேவையானது. எனவே, புத்தகம், பத்திரிகை, சஞ்சிகை இறக்குமதியை — அறிவு சம்பந்தப்பட்ட விடயத்தை — வர்த்தக ரீதியில் அணுகுவது அடிப்படையிலேயே தவறானதொன்று என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

(3) இந்தியாவிலிருந்து 'பேசும் படம்' 'பொம்மை' போன்ற தமிழ் சினிமா சஞ்சிகைகளை தடைசெய்துள்ள இலங்கை அரசு — 'பிலிம்பேர்' 'பிக்சர் போஸ்ட்' போன்றவற்றை மட்டும் இறக்குமதி செய்ய அனுமதித்திருப்பதேன்? அவற்றில் இந்திப்படங்களைப்பற்றிய செய்திகள் வருவதனாலும் — இந்திப்படங்களின் ரசிகர்களாக சிங்களவர்களே பெரும்பாலும் இருப்பதனாலுமா?

(4) 'டைம்ஸ் ஆப் இந்தியா' சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளதுபோல் — 'இந்திய சஞ்சிகைகள் மீது ஈழத் தமிழ் மக்களுக்குள்ள ஆர்வத்தை குறைப்பதற்கு அரசு விரும்பினால் அதற்குள்ள ஒரே வழி அவற்றுக்கு தடை விதித்து அவர்களது வசிக்கும் உரிமையைப் பறிப்பதல்ல! உள்நாட்டில் தமிழ் ச[illegible] போதிய உதவிகளை செய்வதுதான்!

# கல்கி நினைவு!



சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு போன்ற அழியாத காவியங்களைப் படைத்து, தமிழர் சமுதாயத்துக்கு அதன் தொன்மையையும், தமிழ்மொழி, கலை, கலாசார பெருமைகளையும் உலக நாடுகளைக் கட்டியாண்ட தமிழர்களின் பாரம்பரிய வீரத்தையும் எடுத்துக்காட்டி — புத்துயிரூட்டியபேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவு தினம் டிசம்பர் ஐந்து ஆகும்.

தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராடி வரும் நம்முடைய இளைய தலைமுறையினர், ஒவ்வொருவரும் கல்கியின காவியங்களை நிச்சயம் படித்து தமிழர் சமுதாயத்தின் பண்டைப் பெரும் வாழ்வை அறிந்துகொள்வது மிகவும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'படை'பலம் சேர்த்தீர்! 'பாசறை' அமைப்பீர்!!

அன்பு நண்பா,

'முடியுமா இவர்களால்? ஒருநாள் இரண்டு நாளா? அதுவும் ஐம்பது நாட்கள்! திட்டம் ஏதோ பெரிதாகத்தான் போட்டு விட்டார்கள். அதை நடைமுறைப்படுத்த இயலுமா?' — இப்படி ஆயாசமான குரலில் ஐயப்பாடு கிளப்பினர் சிலர்!

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு இடம், இரண்டு இடங்களில் என்றாலும் பரவாயில்லை! ஒவ்வொரு தொகுதியிலுமாமே! ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு நாள் என்று கூட இல்லை — பல நாட்கள்!! வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மலையகத்தையும் வேறு சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே...' — இவ்வாறு அனுதாபப்பட்டனர் வேறு சிலர்!

50 நாள் போராட்டம் நடத்தப்போகிறீர்களா? நடத்துங்கள் — அதையும் ஒரு கை பார்த்துவிடுவோம் நாங்கள்! நீங்கள் 50 நாள் போராட்டம் நடத்தினால், அதற்கு எதிராக நாங்கள் நூறுநாள் போராட்டம் நடத்துவோம்—' என்று அச்சுறுத்தல் விடுத்தனர் முற்போக்குவாதிகள் தம்மைக் என்று கூறிக்கொள்ளும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் சிலர்! — பத்திரிகைகளுக்கு அறிக்கையும் விடுத்தனர்!

'பட்டினி கிடக்கப்போகிறார்களாம் — நன்றாக கிடக்கட்டும் — நமக்கு அது இலாபம் தான்: உணவு மிச்சம்தான்; என்று ஏளனம் செய்திட்டார் — எக்களிகொட்டிச் சிரித்திட்டார் — அறப்போரின் தத்துவமறியாத — அறப்போரின் சக்தியையறியாத — அமைச்சர் ஒருவர்!

ஆம் நண்பா, நம்முடைய தமிழ் இளைஞர் பேரவையினர், ஆட்சியாளர்கள் தமிழ் சமுதாயத்துக்கும், தமிழ் இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இழைத்து வருகின்ற அநீதிகளுக்கு எதிராக—அநீதி இழைப்போரின் மனச்சாட்சிக்கு சவாலாகவும், அகில உலகத்திலுமுள்ள மனிதமனம் படைத்தோரின் கண்களில் ஈழத்தில் தமிழர் இனம் படுகின்ற ஆற்றொணாத்துன்பங்களை எடுத்துக்காட்டிடவும், தமிழ் ஈழம் முழுவதும் தொடர்ச்சியாக ஐம்பது நாட்கள் உண்ணாவிரதம் அனுட்டித்து — அறப்போர் நடத்திடுவது என்று முடிவெடுத்து அதை நாட்டினர்க்கு அறிவித்த காலை, மேற்கண்டவாறாக பலவகைக் கருத்துக்கள் கிளம்பின; சீறிப்பாய்ந்தனர் சிலர்; உண்மையிலேயே அனுதாபத்துடன் கருத்துத் தெரிவித்தனர் சிலர்; கிண்டல் செய்தனர் இன்னும் சிலர்!

உண்மையிலேயே—நான் கூட சற்று அச்சம் கொண்டேன் — 50 நாட்கள் போராட்டத்தை நம்முடைய இளைஞர்கள் தொடர்ந்து நடத்துவார்களா என்பது என் அச்சத்துக்கு காரணம் அல்ல; எடுத்த காரியத்தினைத் தொடுத்து முடித்திடும் ஆற்றல் மிக்கோர் நம் அருமைத்தம்பிகள் என்பது எனக்குத் தெரியாததல்ல! என் அச்சத்துக்குகாரணம் — மாற்றார் காலில் மண்டியிட்டு அவர் போடும் எலும்புத்துண்டினைச் சுவைத்துக்கிடந்திடும் நம் இனத்தைச் சேர்ந்த ஒரு சிலர்—ஒருவேளை நம் இளைஞர்களின் அறப்போராட்டத்துக்கு போட்டியாக ஏதாவது கலாம் விளைத்து — அதன் எதிரொலியாக அறப்போரில் ஈடுபட்டிருக்கும் நம் இளைஞர்களில் துடிப்புமிக்க ஒரு சிலர் 'பதிலுக்குப் பதில்' என்ற முறையில் செயற்பட்டிருக்கும் ஒரு விரும்பத்தகாத சூழ்நிலை ஏதும் தோன்றிவிட்கூடாது என்பதே என் அச்சத்துக்கு காரணம்!!

ஆனால் உண்மையான இலட்சிய வேகமுடன் — தம்மைத் தாமே வருத்தி தியாக வேள்வி நடத்திட முன் வந்த தமிழ் இளைஞர் பேரவையினருக்கு தமிழர் சமுதாயம் அளித்த முழுமையான ஆதரவையும் அனுதாபத்தையும் கண்டதும் — நூறு நாள் போராட்டம், அது இது என்று பேசிய துரோகக் கும்பல் இருந்த இடம் தெரியாமல் மூச்சடங்கி செத்து விட்டது! ஆம், தமிழ் தேசிய எழுச்சியின் முன்னால் சமசமாஜிகள் என்றும், கம்யூனிஸ்டுகள் என்றும், சிங்கள சுதந்திரக்கட்சியென்றும் கூறிக்கொண்டு, உண்ணாவிரதத்துக்கு எதிராக நூறு நாள் போராட்டம் நடத்தப்போவதாக 'வீரம்' பேசி 'விழல்' அறிக்கை விட்டவர்கள் —வியர்த்து விறுவிறுத்து—ஒரு நாள் கூட எதிர்ப்போராட்டம் நடத்திட முடியாமல் ஒடிப்பதுங்கி ஒதுங்கிவிட்டார்கள் என்றால் அது தமிழர் சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சிக்கு—ஒற்றுமை உணர்வுக்கு—நம்முடைய தமிழ் இளைஞர்களின் உறுதிக்கு — கிடைத்திட்ட வெற்றியாகும்!

இந்திய விடுதலைக் கவிஞன் பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் பதினோராம் நாள் தொடங்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தை தொடர்ச்சியாக ஐம்பது நாட்கள் தமிழ் ஈழத்தின் மூலை முடுக்கெங்கும்—ஒவ்வொரு தொகுதியிலும் — நடத்தி முடித்திட, தம்பி பிரான்சிஸ், வரதராசா, சரவணபவன், தவராசா, புஷ்பராசா ஆகியோரும், மற்றும் இளைஞர்பேரவையின் ஈடிணையற்ற தொண்டர்களும்பகலென்றும் இரவென்றும் பனியென்றும், மழையென்றும் காற்றென்றும் பாராது விடுவாசல்களை மறந்து—தூக்கத்தை இழந்து—ஓய்வு ஒழிச்சலின்றி எறும்புபோல எத்துணை சுறுசுறுப்புடனும் விடுதலை உணர்வுடனும், சுழன்று சுழன்று பணியாற்றினார்கள் என்பதை நான் அறிவேன்!

பாரதி நினைவுநாளான செப்டம்பர் 11ல் ஆரம்பித்த உண்ணாவிரதத்தை, வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே திருக்கோவில் வரை — மன்னார் தொடக்கம் மலையகம்வரை — நடத்திமுடித்து—சென்ற ஞாயிற்றுக்கிழமை ஐம்பதாவது நாளை—கொட்டும் மழைக்கு மத்தியிலும் நிறைவுசெய்து தமிழினத்தின் நெஞ்சில் நீங்கா இடத்தை பெற்றுவிட்டனர் தமிழ் இளைஞர் பேரவையினர்!

இந்த, ஐம்பது நாள் உண்ணாவிரதத்தை—அஞ்சாது அயராது—சோராது துவளாது, திட்டமிட்டப்படி வெற்றிகரமாக நடத்திக்காட்டியதன் மூலம் —வெட்டிவா என்றால் கட்டிவரக்கூடிய ஆற்றல்மிக்கோர்—எடுத்த காரியத்தை தொடுத்து முடித்திடும் திண்ணிய நெஞ்சினர் — எதிர் காலத்தில் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை ஏற்றுநடத்திடக்கூடிய உளவலிமை படைத்தவர்—என்பதை தமிழ் இளைஞர் பேரவையினர் ஐயந்திரிபுக்கு இடமின்றி எடுத்துக்காட்டிவிட்டனர்!

'தமிழனைத் தமிழனே ஆளவேண்டும்; தமிழ்மொழிக்கு ஆட்சிமொழியந்தஸ்துவேண்டும்; தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைத்திடும் தரப்படுத்தல் எனும் தகாத முறை ஒழிக்கப்படவேண்டும்; மலையகத்தமிழர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறி விவசாயத்திலீடுபடுதற்கு எவ்வித தடையும் இருந்திடக்கூடாது; வருடக் கணக்காக, மாதக்கணக்காக சிறைவைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் மீது உடனடியாக நீதி விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்'—என்கின்ற ஐந்து நீதியான கோரிக்கைகளை முன்வைத்தே இந்த 50 நாள் அறப்போரை தமிழ் இளைஞர்பேரவை நடத்திமுடித்திருக்கிறது!

சிலர் கேட்டிடக்கூடும்— 'உண்ணாவிரதம் நடத்தினீர்களே உங்கள் கோரிக்கை வெற்றி பெற்றதா—இல்லையே — எனவே இது வீண் வேலைதானே' என்று!

ஆனால் நண்பா—அறம் என்பது உடனடியாக அநியாயம் செய்வோரை அறுத்திடக்கூடியதல்ல—நின்று பயன் தந்திடக்கூடியது — அதனால்தான் கூறுவார்கள் 'தெய்வம் நின்று கொல்லும்' என்று! நம்முடைய இளைஞர்களின் தியாகத்துக்கு-சிங்கள ஆட்சியாளர்கள் என்றோ ஒருநாள் பதில் சொல்லியே ஆகவேண்டும்!

எனினும் — இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்தபோது—ஐம்பது நாள் அறப்போரின் விளைவாக ஆட்சியாளர் அலமந்துவிடுவர்; அஞ்சியோடிடுவர்; அநீதி துடைத்திடுவர் என்று நம்மில் யாருமே எதிர்பார்த்திடவுமில்லை—அப்படி கூறிடவுமில்லை!

ஆனால் இந்த உண்ணாவிரத இயக்கத்தின் பயனாக பல நன்மைகள் விளைந்திருக்கின்றதென்பதை யாரும் மறுத்திடமுடியாது; தமிழ் இளைஞர் பேரவையின் ஐந்து கோரிக்கையிலுள்ள நியாயத்தை அகில உலகமும் அறிந்துகொள்ள முடிந்திருக்கிறது! ஈழத் தமிழினத்துக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை நாட்டுக்கும் உலகுக்கும் இந்த உண்ணாவிரத இயக்கம் வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது!

அதுமட்டுமல்ல நண்பா —தமிழ் ஈழத்தின் மூலைமுடுக்குகளெங்கும் — பட்டி தொட்டிகளெங்கும் — இருக்கின்ற பாமர மக்களுக்கும் இன்று விடுதலை உணர்ச்சி—மொழி உணர்ச்சி—ஏற்பட்டிருக்கிறதென்றால் — அதற்கு காரணம் உண்ணாவிரதமே! முதியோரும் இளையோரும், மாணவரும் மங்கையரும் இன்று தமிழ் விடுதலை உணர்வு பெற்று—அரசியல் எழுச்சியை பெற்றிருக்கிறார்கள் என்றால்—அதற்கு ஒரு காரணம் — இளைஞர் பேரவையின் இயக்கமேயாகும்!

இந்த உண்ணாவிரத இயக்கம் — மற்றோர் பெரும் நன்மையை உண்டாக்கிவிட்டிருக்கிறது. தமிழ்த்தேசிய இனத்தின் ஒற்றுமையை—ஒருமைப் பாட்டைமேலும் வளர்த்திருக்கிறது — யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலைநாடு, வன்னி திருமலை, என்ற மண் வேறுபாடுகளையும், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவன் என்ற சமய வேறுபாடுகளையும், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற சாதி வேறுபாடுகளை [illegible] ஒன்றுபட்ட தமிழர் சமுதாயத்தை உருவாக்கிட உண்ணாவிரத இயக்கம் நன்கு பயன்பட்டிருக்கிறது.

மற்றொன்றையும் குறிப்பிடவேண்டும்-தமிழ் விடுதலைப் போருக்கு ஏற்ற தன்மானச்செயல்வீரர்கள்—ஆற்றல் மிக்க அறப்போர் காளைகள்—எங்கெங்கு, எந்தெந்த இடங்களில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அவர்களையெல்லாம் பாசறையில் சேர்த்து பயிற்சிகொடுத்திடவும் உண்ணாவிரத இயக்கம் வகை செய்திருக்கிறது!

ஆம் நண்பா — இளைஞர் பேரவையின் ஐம்பது நாள் உண்ணாவிரதம்—விடுதலைப்போராட்டமல்ல—விடுதலைப்போருக்கு ஆள், அம்பு அணி சேர்த்திடும் ஒரு முயற்சி—படை வீரர்களைத் திரட்டுகின்றவேலை—அந்தவேலை வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது — இனி அடுத்த வேலை ஆங்காங்கே இயக்கப் பாசறைகளை அமைத்திடுவதுதான்!

ஆட்சியாளர்களின் அநீதிகள் களையப்படாதது மட்டுமல்ல — இன்றைக்கு இன்னும் அதிகரித்துக்கொண்டு வருகிறது; 42 தமிழ் இளைஞர்கள் மீது விசாரணையுமில்லை — விடுதலையுமில்லை—ஆனால் மேலும் இளைஞர்கள் காரணமின்றியே கைதுசெய்யப்படுகிறார்கள்!

'தரப்படுத்தல்' எனும் தகாத முறைவேண்டாம் என்று தமிழ் அறிஞர்கள் எதிர்க்கிறார்கள்; தமிழ் மாணவர்கள் எதிர்க்கிறார்கள்; அகில இலங்கைத் தலைமை ஆசிரியர்சங்கமும், தரப்படுத்தல் முறை அகற்றப்பட்டு—திறமையடிப்படையிலேயே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது; ஆனாலும், கல்வியமைச்சரால் நியமிக்கப்பட்ட "நிபுணர்" குழுவோ—'தரப்படுத்தல்' முறை சரியானது தான் என்றும் — அதையே மேலும் தொடரலாம் என்றும் பரிந்துரைத்திருக்கிறது! அத்துடன் இன பிரதேச அடிப்படையில், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்யும் படியும் கூறியிருக்கிறது!

## அரசியல் மன்றம்

இதன் பொருள்—கல்வித்துறையில் தமிழ் மாணவர்களுக்கு இன்றைக்கு இழைக்கப்படுவதாக சொல்லப்படும் அநீதிகள் மேலும் தொடர்வதுமட்டுமல்ல—இன்னும் அதிகரிக்கப்போகிறது என்பதே! 'தரப்படுத்தல்' எனும் தமிழ் மாணவரைத் தரைப்படுத்தும் திட்டம் தொடரப்போகிறது!

எனவே இத்தகைய அநீதிகளுக்கு எதிராக தொடர்ச்சியாக — ஆனால் கடுமையாகப் போராடிடவேண்டிய நிலை இன்று தோன்றியிருக்கிறது — தமிழ் ஈழம் விடுதலை பெறும் வரை நிலைதளராது போராடக்கூடிய முறையில் நம் இளைஞர் பேரவை தனது இயக்க அமைப்பினை உருவாக்கிப் பலப்படுத்திடவேண்டும்; தமிழ் ஈழம் எங்கெங்கும் பாசறைகள் சங்கிலிப் கோவைபோல அமைக்கப்படவேண்டும்! இயக்கத்தின் இறுக்கமான அமைப்பே எதிர்காலப் போராட்டங்களின் வெற்றிக்கு அச்சாணியாக விளங்கிடக்கூடியது.

ஆகவே இயக்கப்பாசறைகள் அமைத்திடும் இளைஞர் பேரவையின் அடுத்த செயல்திட்டத்துக்கு, தமிழ் சமுதாயம் பூரணமாக தம் ஆதரவை வாரி வழங்கட்டும்!

உன் அன்புத்தோழன்,

கோவை-மகேசன்

### 'வாலிபத்தை' பற்றி அறிஞர் அண்ணா......

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள் அகத்திலே அருவிபோல் ஆர்வம். முகத்திலே வீரக்களை செயலிலே துடிதுடிப்பு காணப்படும் தலை குனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, "நம்மால் ஆகிற காரியமா?" என்று இழுத்து பேசுவது, ஆகிய முறைகள் அவர்களுக்கு பிடிக்காதவை. அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

மாயாவாதமும் மனமருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப்பேச்சை தட்டி நடக்கும் வீரம், வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டுமென்ற வீரம், ஆபத்துக்களைப் பொருட்படுத்தாமல் அநீதியைக் கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு வாலிபர்களிடையே மிகுந்திருக்கும். சும்மாயிருப்பதா? நாம் என்ன சொரணையற்றவர்களோ! புறப்படு, போரிடு, அநீதி ஒழியட்டும் அல்லது நாம் ஒழியும்வரைபோர். இந்தப் பேச்சுத்தான் வாலிபர் செவியேறும்.

வாலிபர்கள் உரிமைப் போர்படையின் ஈட்டி முனைகள். அவர் தம உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும். வாழ்க்கையென்னும் பொய்கையிலே விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம். பகுத்தறிவு என்னும் பகலவன் எரிக்கப்பட்டு விஷப்பூச்சிக்கள் போன்ற சுயநல கருத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும். தூய்மையான அந்த வாலிப உள்ளங்களில் சந்தனக் காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல், அது போன்றதே வாலிபம்.

அனுப்பியவர்: — எஸ்.எம்.தாஸ்—திருமலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மற்றோர் பேரிழப்பு

வெள்ளைக்காரனே என்று ஐயத்தை ஏற்படுத்தக் கூடிய வெள்ளைவெளேரென்ற மேனி!

அந்த மேனியைப் போலவே கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம்!

கபடமற்ற வெள்ளை மனம் இருப்பதனால் ஒளிவு மறைவு ஏதுமின்றி இரைந்துசத்தமிட்டபடியே எதையும் யாருடனும்பேசுகின்ற இயல்பான குணம்!

நேர்மை, உண்மை, சத்தியம் — இவற்றின் மொத்த வடிவம்!

ஆம்—அவர், அவர்தான் — 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களை கண்ணீர்க்கடலில் தள்ளிவிட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்ட நம்முடைய மன்னாரின் தங்கம்—மாதோட்டத்தின் மூத்த தமிழ்த்தலைவன் — வீ. ஏ. அழகக்கோன் அவர்கள்!

பதினேழு ஆண்டுகளாக — பைந்தமிழினத்தின் விடுதலைப் பாசறையாம் தமிழரசுக்கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு பாரறிய சேவை புரிந்த அந்த பண்புத்திருமகன்—பயணத்தில் இறங்கிவிட்டான் — திரும்பிவராத பயணத்தில்!!

ஈழத்தமிழினமே! எழு! விழி! ஈழத்தமிழ் நாடு உன் தாய்த்திருநாடு — ஆண்டபரம்பரை நீ — ஆளப்படும் இனமல்ல! வேங்கை போல் குதித்தெழுந்து விடுதலைக்குப் போராடு—இந்து, கிறிஸ்தவன், இஸ்லாமியன் என்ற பேதத்தை அகற்றிடு! உயர்ந்தசாதி தாழ்ந்தசாதி என்ற வேறுபாட்டுக்கு வேட்டு வைத்திடு! யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், மன்னான், வன்னியான், என்று பிரதேச பேதம் பேசி பிளவுபட்டுப் போகாதே! ஒரே கொள்கையின் கீழ்—ஒரே இயக்கத்தின் கீழ்—ஒரே கொடியின் கீழ் — ஒரே தலைவனின் கீழ்—ஒன்றுபடு! போராடு—என்றுஎழுந்த அந்த மெல்லிய குரல்—வேகம் நிறைந்த உறுதியான குரல்—தந்தை செல்வாவின் தங்கக்குரல்—பதினேழு ஆண்டுகளுக்கு முன் அழகக்கோன் அவர்களின் செவிகளில் விழுந்தது!

இயல்பாகவே தமிழ் உணர்வு மிக்கவரான அழகக்கோன் அவர்களின் செவிகளில் தந்தையின் போர்க்குரல் புத்தெழுச்சியை ஊட்டியது!

தமிழர் விடுதலைப்படையில் தம்மையும் ஓர் அங்கமாக இணைத்துக் கொண்டார்—தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினரானார்!

தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் — தமிழரசுக்கட்சியின் மூவர்ணக்கொடியின் கீழ் — 17 ஆண்டுகளுக்கு முன்—1956ம் ஆண்டில் தம்முடைய இனவிடுதலைப்பணியை தொடக்கிய அழகக்கோன் இறக்கின்றவரை—அங்கிங்கு ஆடாத உறுதியான இலட்சியவாதியாகவே விளங்கினார்!

தாம் மட்டுமல்ல—தமது மன்னார் மாவட்டத்து மானத்தமிழ்குலத்துக்கும் விடுதலை உணர்வூட்டி செல்வாவின் படைக்கு கொண்டு வந்து சேர்த்த தனிப்பெருமை அழகக்கோனுடையது!

அதன் காரணமாக — 1956ம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக கடந்த 17 ஆண்டுகளும் தங்கள் ஏகபோகத் தலைவனாக — பாராளுமன்ற உறுப்பினராக—அவரைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்திருக்கிறார்கள்—மன்னார் தொகுதி தமிழ் பேசும் மக்கள்!

இந்தப் பதினேழு கால அரசியல் வாழ்வில் — உறுதி குலையாத கொள்கைவாதியாக—இயக்கத்தின் மீது விசுவாசம் மிக்கவராகவே விளங்கினார்!

தமிழரசுக்கட்சி நடத்திய அத்தனை மொழிப் போராட்டங்களிலும் முன்னணி வகித்தவர் அழகக்கோன்!

இரு தடவைகள் 1958லும்—1961லும்—தடுப்புக் காவல் சிறைகளில் சிங்கள ஆட்சி அவரைப் பூட்டி வைத்ததுண்டு!

ஆனால்—சிறை அவர் சிந்தையைக் கலைத்ததில்லை! தடுமாற வைத்ததில்லை!

தமிழரசுக்கட்சி நடத்திய போராட்டங்களில் ஈடுபட்டதால்—எத்தனையோ இடுக்கண்கள் தொல்லைகள் துன்பங்கள் அவரை நாடியதுண்டு.

ஆனால்—எந்தக் கட்டத்திலும் மற்றொரு 'மார்ட்டினாக' மாறாது—உண்மையான இலட்சிய வாதியாக உண்மையான கத்தோலிக்கராக — உண்மையான தமிழராக—வாழ்ந்து காட்டியவர் அவர்!

'சந்தர்ப்பவாதம்' என்பது கிஞ்சிற்றும் தெரியாத கர்ம வீரர் அவர்!

தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக—தான் இணைந்து நின்ற இயக்கக்கொடியின் கீழ்—தான் ஏற்றுக்கொண்ட தலைவனின் ஆணையின் கீழ்—இறுதிவரை பணியாற்றியவர் அவர்!

ஆம் — அத்தகைய மன்னாரின் முத்து—மாதோட்டத்தின் சொத்து—இன்று மறைந்துவிட்டது!

அந்த இலட்சிய தீபத்தை வானுலகில் வரவேற்றுத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு விட்டார்கள்—அமரர்கள் வன்னியனாரும், வரோதயனாரும், ஏகாம்பரமும், வீ. ஏ கந்தையாவும், டாக்டர் நாகநாதனும்!

அந்த இலட்சிய தீபம்—மாதோட்ட நன்னகரின் மானத்தமிழர்களின் நெஞ்சமெலாம் என்றும் எரிந்து கொண்டிருக்கும்!

தமிழ் ஈழவிடுதலைப் போருக்கும் அது நிச்சயம் ஒளி கொடுத்துக் கொண்டேயிருக்கும்!

# அழகக்கோன் ஐயாவின் அரும்பெரும் பண்புகள்!

ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திலே விரிந்தகன்ற பிரதேசமான மன்னார் மாவட்டத்தைக் கொள்கை நெறி பிறழாது காத்து வந்த மாவீரர் உயர் திரு. வி. அ. அழகக்கோன் அவர்களும் இயற்கையின் அரவணைப்புக்கு உள்ளாகி விட்டார் என்ற செய்தி அனைவரையும் ஆருத்துயரத்தில் ஆழ்த்தி நிற்கின்றது. அல்லலும் சோதனையும் நிறைந்த இவ்வேளையிலே மேலும் ஒரு பேரிடியாக இந்த இழப்பு தமிழினத்தை வந்து தாக்குகிறது.

ஓரிரு ஆண்டுகளல்ல, பதினேழு நீண்ட வருடங்களாக மன்னார் மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதி என்ற பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்து இதற்குரிய அத்தனை கடமைகளையும் செய்து முடிப்பதற்காக அல்லும் பகலும் அலுப்புச் சலிப்பின்றி உழைத்து வந்த உத்தமர் திரு. வி. அ. அழகக்கோன் அவர்களாவர். அவர் தமக்காக வாழவில்லை. தம் குடும்பத்துக்காகவும் வாழவில்லை. அவரது ஆற்றல் அத்தனையும் பொதுப் பணிக்காகவே செலவிடப்பட்டது. தம் இறுதி மூச்சு வரை அமரர் அழகக்கோன் அவர்கள் உத்தமப்பணியாளராகவே வாழ்ந்தார்.

மக்களின்சாதாரணசேவகனாகவோ தொண்டனாகவோ பணியாளனாகவோ பாராளுமன்ற உறுப்பினனாகவோ வாழ்வது வேறு; அடிமைப் படுத்தப் பட்டு நசுக்கப் படும் ஓரினத்தின் விடுதலைக் குரலெழுப்பும் விறல் மிகு வீரனாய் வாழ்வது வேறு. முன்னையதில் ஓரளவு ஆறுதல் இருக்கும், ஓய்விருக்கும், இடைவேளை இருக்கும். ஆனால் பின்னையதான விடுதலை வேட்கையை அரவணைக்கும் வீரனாய் வாழ்வதிலோ இடையறா உழைப்பும் அல்லலும் துயருமே தான் இருக்கும். அமரர் அழகக்கோன் அவர்கள் தேர்ந்து வாழ்ந்தது தமிழினத்தின் அடிமை நிலைபோக்கும் விடுதலை வீரனின் விறல் மிகு வாழ்வையேதான். இந்த வாழ்விலே அன்னார்

**நாக-பத்மநாதன்**

சிறிதும் தளராது நிலையூன்றி நின்றார்; தம் இறுதி நாள் வரை நின்றார்.

அமரர் சார்ந்து நின்ற அரசியற் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்று ஏட்டிலே சுகமும் சலுகையும் என்பது கிடையவே கிடையாது. இத்தகைய கட்சியின் முக்கிய பங்காளராகவும் பண்புடைத் தலைவர்களில் ஒருவராகவும் 1956ம் ஆண்டிலிருந்து இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினராகவும் கடமையாற்றி வந்த உத்தமப் பெரியார் திரு. வி. அ. அழகக்கோன் அவர்களினில் அவர் தம் வாழ்விலே தாங்கியிருக்கவேண்டிய இன்னல்களும் ஏற்று அனுபவித்திருக்கவேண்டிய டிய துயர்களும் தெய்திருக்க வேண்டிய தியாகங்களும் எத்தகைய தாயிருக்கும் என்பதை நாமேதான் ஊகிக்க வேண்டும்.

பாராளுமன்றப் பதவி கிடைத்த அரைவருடத்தில் நிறம்மாறிக் குணம் மாறி கொள்கை மாறி துரோகியாய் மாறும் மார்ட்டின் கும்பலை நாமறிவோம். இத்தகைய சிறிசுகள் எங்கே? எம் அன்பு நிறை அழகக்கோன் ஐயாவின் நெறி பிறழாத நேர்மையும் கொள்கையும் கட்சியிலூன்றிய திண்மையும் எங்கே?

1956ம் ஆண்டிலேயே அன்றைய ஆளும் கட்சியினர் அமரரை அமைச்சர் பதவி கொடுத்து வலை வீச முயன்றனர். அதற்கெல்லாம் அன்னார் இம்மியும் அசையவில்லை. ''நசுக்கப்படும் தமிழினத்தின் விடுதலைக்காக உழைக்கவே நான் அனுப்பப் பட்டுள்ளேன். இறுதிவரை அதற்காகவே நான் உழைத்து மடிவேன்'' என திடமுடன் பதில்கொடுத்த பெரியார் திரு. அழகக்கோன் அவர்களாவர். அன்றுகூறிய சொல்லைக் காத்து செயலில் நிலையூன்றி நின்ற பெருமையை — இன்று எம் தலைவர்கள் என வரும் பலரிடையே இல்லாது போய்விடுகின்ற அரிதிலும் அரிதான அரும்பெரும் பொக்கிஷத்தை—தம்முடன் எடுத்துச் செல்கிறார் அமரர் அழகக்கோன் அவர்கள்!

திரு. அழகக்கோன் அவர்கள் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடத் தொடங்கியது 1928ம் ஆண்டிலாகும். இந்த 45 வருட காலத்துள்ளும்

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்!

## பொய்ப் பிரச்சாரங்களுக்கு பேராசிரியர் வித்தியானந்தன் ஆப்பு

'நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு திட்டமிட்டப்படி 1974ம ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

'மகாநாடு பிற்போடப் பட்டுள்ளதென்றும், ஆராய்ச்சி மன்றத்துடன் தொடர்புடைய பலர் மன்றத்திலிருந்து பதவிகளைத் துறந்திருப்பதாகவும் தப்பான தகவல்கள் செய்தித் தாள்களிலும் தனிப்பட்டவர்களாலும் வெளியிடப்பட்டுவருவதால் பின்வரும் அறிக்கையைப் பொதுமக்களுக்கு விடுக்க விரும்புகின்றேன்.

'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தில் இலங்கைக் கிளை யாப்பு விதிகளுக்கமைய 1972ம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்போது முகாமைக் குழுப் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் தமிழாராய்ச்சி மன்றத்தோடு, முதலாவது தமிழாராய்ச்சி மகாநாடு நடந்த காலத்திலிருந்து, நெருங்கிய தொடர்புடையவர்களே.

'அப்போது பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:- தலைவர்: கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா, இணைச் செயலாளர்கள்— வண. எஸ். எஸ். தனிநாயகம், ஜேம்ஸ் ரி. இரத்தினம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், துணைத் தலைவர்கள் கே. சி. தங்கராஜா, இ. பஸ்தியாம்பிள்ளை, என். அம்பிகைபாகன், திருமதி. பாலம் கிருஷ்ணன், திருமதி. பு. திருச்செல்வம். பொருளாளர்கள்—சி. அம்பலவாணர், இ. நமசிவாயம், கே. செல்வநாதன். இவர்களுள் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா மட்டுமே தமது பதவியைத் துறந்துள்ளார். ஏனையோர் யாவரும் தொடர்ந்து தமது பதவிகளிற் கடமையாற்றி வருகிறார்கள்.

'கொலரா நோய் காரணமாகவோ, வேறு எக்காரணம் பற்றியோ மகாநாட்டினைப் பின்போட வேண்டாமென அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தோடு தொடர்புடைய பல வெளிநாட்டு அறிஞர்கள் எமக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு பின்போடுவது ஆராய்ச்சி மகாநாட்டிற்கு வருவதற்கு ஒழுங்கு செய்துள்ள வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு பிரச்சினைகளை உண்டாக்கும் என்றும், இலங்கை வாழ் தமிழர் பற்றிய நல்லபிப்பிராயத்திற்குப் பங்கம் விளைக்கும்என்றும் ஆராய்ச்சி மகாநாடுகளின் தொடர்ச்சியைக் குலைக்குமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'இதுவரை எழுபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டறிஞர்கள் மகாநாட்டிற்கு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். இன்னும் பலர் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை ஐம்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் கிடைத்துள்ளன. பலர் இன்னும் சில நாட்களில் அனுப்புவதாக எழுதியுள்ளார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, யப்பான், ஹங்கேரி, அவுஸ்திரேலியா, இத்தாலி, மலேசியா, சுவீடன், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர் கலந்து கொள்ளும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடாக இது அமையும்.

ஆராய்ச்சி மகாநாட்டிற் பொது மக்களுக்கெனச் சிறப்புச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் பொருட்காட்சியும இடம் பெறும். இவற்றிற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு அறிஞர்களை வரவேற்று உபசரிப்பதற்குப் பல குடும்பங்கள் முன்வந்துள்ளன. மகாநாட்டினைச் சிறப்பாக நடாத்துவதற்கு யாவரதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

— இவ்வாறு தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் கிளைத் தலைவர் திரு சு. வித்தியானந்தன் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறையிலுள்ள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரல் மூலம், இந்தப் பொலீசாருக்கு எதிராக என்ன நடவடிக்கையெடுக்கப் படவுள்ளது?

லக்ஸ்மன் ஜெயக்கொடி:- இப்பொழுதுதான் எனக்கு அந்த முறைப்பாடு கிடைத்துள்ளது. விசாரிக்க உத்தரவிட்டுள்ளேன்.

தர்மலிங்கம்:— "பல்லாயிரக்கணக்கான பயங்கரவாதிகளை அடைத்து வைத்திருந்தீர்கள். அவர்களிடம் பங்கீட்டரிசி புத்தகத்தை ஒப்படைக்கும்படி கோரவில்லை. ஆனல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களிடம் பங்கீட்டுப்புத்தகம் கோரப்படுகிறதாம். இந்தப் பங்கீட்டுப் புத்தகத்திலிருந்து பெறும் அரிசியைக் கொண்டுதான், இவர்களின் உறவினர்கள், இவர்களைப் பார்க்க வரும்போது உணவு தயாரித்து கொண்டு வருகிருர்கள். இதைத் தடுக்க முயலுகிறீர்களா?

பயங்கரவாதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் பலரை பரீட்சை எடுக்க அனுமதித்தீர்கள்—தமிழ் இளைஞர்களை பரீட்சை எடுக்க அனுமதி மறுக்கிறீர்கள்!

சிறைகளில் சுகாதார நிலைமை மிக மோசமாக இருக்கிறது. நோய்க்கு, உடனடியான தக்க சிகிச்சை இல்லை.

நீர்கொழும்பு சிறையில் அண்மையில் சிலருக்குபொக்கிளிப்பான் வந்ததாக அறிந்தேன். அப்படி நோயால் பாதிக்கப்பட்டவரை தனிமைப்படுத்தாமல், ஒன்ருக வைத்திருந்திருக்கிருர்கள்.

நீதி விசாரணையோ, விடுதலையோ இன்றி இந்த தமிழ் இளைஞர்களை ஏன் இன்னும் சிறைகளில் வைத்திருக்கிறீர்கள்? விசாரணைக்காக என்று கூறி அவர்களை அடிக்கடி 4-வது மாடிக்கு அழைத்து வந்து, அடித்து உதைத்து சித்திரவதை செய்கிறீர்கள்! 4-வது மாடியிலுள்ளவர்களுக்கு உடற்பயிற்சி வேண்டுமென்ருல், தடுப்புக் காவலிலுள்ள தமிழ் இளைஞர்களை கொண்டு வந்து அடிப்பது தானு உடற்பயிற்சி?

விசாரணை முடிந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடருங்கள் — அல்லது — விடுதலைசெய்யுங்கள். இந்த இளைஞர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு சிறைகளுக்கு மாற்றினல், அவர்களது பெற்ருேர்கள் சென்றுபார்ப்பதற்கு வசதியாக இருக்கும் அதையாவது செய்யுங்கள்!

—— 28—11—73ல்தேசிய அரசுப்பேரவையில் பேசிய உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# 'விசுவாசமிக்க ஊழியரை தமிழினம் இழந்துவிட்டது'

## அமரருக்குப் பெரியவர் அஞ்சலி!

'திரு. அழகக்கோன், கடந்த 18 ஆண்டு காலமாக தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கினர். கட்சிக்கு நெருக்கடிகள் ஏற்படுகின்ற வேளைகளில் கட்சியை விட்டு ஓடியவரல்லர் அவர். தமிழரசுக் கட்சியின் வாழ்விலும், தாழ்விலும் பங்கு பற்றியவர் அவர்; கட்சி மீதும், கொள்கைமீதும்கொண்டவிசுவாசத்தை கடைசிவரை மீருதவர் அவர். ஓர் உண்மையான தமிழராகவும், உண்மையான கத்தோலிக்கராகவும் வாழ்ந்தவர் அவர். மன்னர் மாவட்டத்தில் தமிழரசுக் கொள்கைகளை விதைத்து வளர்த்தவர் அவர். அவரது பிரிவு — தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு பெரிய இழப்புத்தான். கட்டுப்பாடும், நேர்மையும் மிக்க ஓர் உண்மையான ஊழியரை தமிழ் மக்கள் இழந்துவிட்டனர்.

இவ்வாறு தமிழர் தந்தை செல்வா அவர்கள் திரு. அழககோனின் மறைவுபற்றி சுதந்திரனுக்களித்த அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் தெமட்டக் கொடையிலுள்ள உறவினர் ஒருவர் வீட்டில் கடந்த திங்கட்கிழமை பகல் ஒரு மணி வரை அமரர் அழகக்கோனின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அங்கு தந்தை செல்வா அவர்கள் சென்று, அவரின் பூதவுடலை பிரதெட்சணமாக சுற்றி வந்து தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரையும் ஒரு பெரிய மலர்வளையத்தை வைத்து அழககோனுக்கு அஞ்சலி செலுத்தினர். ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா, க துரைரத்தினம், செ. குமாரசூரியர். ஆகியோரும் வாளமான தமிழரசுக்கட்சி அபிமானிகளும் கொழும்பில் அஞ்சலி செலுத்தினர்.

### நவம் அனுதாபம்

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் அவர்களே திரு. அழகக்கோனின் மரணச் செய்தி கேட்டதும் முதன் முதலாக மன்னர் சென்று இறுதியாத்திரைக்கு வேண்டிய காரியங்களை முன்னின்று கவனித்தவராவர். அவர் தமது அனுதாபச் செய்தியில் கூறியிருப்பதாவது:-



'அமரர் அழகக்கோன் சிறந்த அரசியல்வாதி. தமிழரசுக்கட்சியின் முக்கிய தூண்களில் ஒன்ருக விளங்கியவர். தமிழர்களின் உரிமைப் போராட்டங்களில் ஆர்வத்துடன் உழைத்தவர். அவரின் பிரிவு நமக்கெல்லாம் ஆழ்ந்த துயரத்தைக் கொடுத்திருக்கிறது.

'1956ம் ஆண்டு முதல் இன்றுவரை நானும் அவரும் பாராளுமன்றத்தில் அருகருகே அமர்ந்திருந்து பல்வேறு விஷயங்கள் பற்றியும் கருத்துக்கள் வெளியிட்டு தமிழினத்தின் தன்மானத்தையும கௌரவத்தையும் பாதுகாத்தோம் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். நண்பர் — அமரர் அழகக்கோன் கருத்துரை வழங்கும் பொழுது அதில் ஆழம் இருக்கும்; எதிர் முகாமிலுள்ள நண்பர்களையும கவர்ந்திழுக்கும் 'சக்தி' இருக்கும். அன்று — பாராளுமன்றத்திலும். இன்று — தேசிய அரசுப் பேரவையிலும் அமரர் அழகக்கோனுக்கு கட்சிசார் பற்ற நண்பர்கள் இருந்தார்கள். சகல கட்சி அங்கத்தவர்களும் அமரர் அழகக்கோனுக்கு தனிமதிப்புஅளித்தார்கள்.

'தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை கடந்த இருபது ஆண்டுகளாக கட்சியின் முக்கிய தலைவர்களில ஒருவராக இருந்து கட்சியின் கட்டுக் கோப்புக்குள் அடங்கி எந்த விதமான பிரச்சினைகளையும் எழுப்பாமல் கட்சியின் தீர்ப்பே தமது தீர்ப்பு என்று கொண்டு, பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் செயல்பட்டவர் அமரர் அழகக்கோன் அவரது இழப்பு தமிழினத்துக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு."

யாழ் முன்னுள் மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் கூறியுள்ளதாவது:-

1956ம் ஆண்டிலிருந்து மன்னர் தொகுதியின் பாராளுமன்றஉறுப்பினராக தமிழ் மக்களின் அரசியலில் அவர் தீவிர பங்குகொண்டு உழைத்து வந்துள்ளார். அவரது அயராத சேவை காரணமாக தேர்தல்களில் தமிழரசுக்கட்சி கோட்டைவிடாத ஒரு தேர்தற் தொகுதியென்ற பெருமையை மன்னர் தொகுதி இதுவரை காப்பாற்றி வந்தது.

தீராத நோயாளியாக அஸ்மாவால் பீடிக்கப்பட்டவராயிருந்தபோதும் பிரச்சினைகள்வந்தபோதெல்லாம் தம்பங்கை நிறைவாகச் செலுத்த அமரர் அழகக்கோன் என்றுமே பின் நின்றது கிடையாது அவரது மறைவால் தமிழ் பேசும் மக்கள் மற்றுமோர் இரும்பு மனிதரை மரணத்துக்குப் பலிகொடுத்துவிட்டோம். [illegible] அமரர் நாகநாதனுக்கும் அமரர் அழகக்கோனுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு: அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

### இளைஞர்பேரவை அனுதாபம்

தமிழ் இளைஞர் பேரவை விடுத்த அனுதாபச் செய்தி வருமாறு:-

'ஐம்பதுநாள் உண்ணுவிரதத்தை நாம் மன்னரில் அன்னுரின் இல்லத்தில்தான் நடத்தினேம். அப்பொழுது எம். பி. அழகக்கோன் ஆழமான கருத்துக்களை எம்மத்தியில் நிகழ்த்தி எமது இயக்கத்துக்கு எழுச்சி ஏற்படுத்தினர் அப்பேற்பட்ட பெருமகனர் எமது ஐம்பதாவது நாள் உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்ட தினமன்று எம்மைவிட்டுப் பிரிந்துசென்றது பேரதிர்ச்சியைக்கொடுத்துவிட்டது. தமிழினத்தின் விடிவுக்கு தம்மை அர்ப்பணித்தவர் அமரர் அழகக்கோன்!"

### உடுப்பிட்டி பா. உ.

உடுப்பிட்டி பா. உ. க. ஜெயக்கொடி விடுத்த அனுதாப செய்தியில் கூறியிருப்பதாவது:-

'அரசியல் தலைவர்கள் எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவது அபூர்வம். இந்த விதிக்கு புறநடையாய் உள்ளவர் அமரர் அழகக்கோன். அவரின் அரசியல் எதிரிகள் தானும், அவரில் வெறுப்போ, குரோதமோ காட்டமாட்டார்கள், அவர் நேர்மையையும் உள்ளொன்று பேசாத தன்மையையும் எவரிலும் வெறுப்போ, துவேஷமோ இல்லாத குணத்தையும்மெச்சத்தகாதார் இல்லை எனலாம்.

'தேசியப் பேரவையில் சபாநாயகர், திரு. அழகக்கோனுக்கு தனிமதிப்புக் கொடுப்பார். அவரின் மறைவு தமிழ் உலகத்துக்கு பேரிழப்பு. அன்னுரின் ஆத்மாசாந்தியடைவதாக"

## அழகக்கோன்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஈட்டியிருக்கக்கூடிய பணமோ பெருவாரி! ஆனல் அவரோ அன்றிலிருந்து இன்றுவரை ஏழை பங்காளனகவே வாழ்ந்தார். ஏழை மக்களின் இதயத்து அன்பையே அவர் பொருளாகத் தேடினர். அதுபோல—

"திறவா நெடுங்கதவு" எனப் போற்றப்படுகிறதே அத்தகைய வாயிலாகவே அமரர் அழகக்கோனின் இல்லமாகிய 'அருந்ததி' என்றும் இருந்து வந்தது. அவரது பண்புடைத் துணையாகிய திருமதி அழகக்கோன் அவர்களும் பொறுமையின் இருப்பிடம்; பண்பின் வடிவம்; உண்மையாய் ஓர் உயர் தாய் அவர்களாவர். அருமை மக்களும் அங்ஙனே.

கிறிஸ்தவர், இந்து, முஸ்லிம் என்ற வேறுபாடோ, தேர்தலுக்கு உழைத்தவர், உழையாதோர் என்ற பிரிவினையோ அமரர் அழகக்கோனின் இதயத்தில் இருந்ததில்லை. அவரது வீட்டிலும் இடம் பெற்றதில்லை இந்த வீடு இயற்கை வீசிய பிரிவின் துயரினல் ஏங்கித் தவிக்கிறது. வீடுமட்டுமல்ல, ஈழத் திருநாடே ஏங்கித் துயருறுகிறது. ஐயோ!

அமர, நின்னை போற்றுகிறேம்! வாழ்த்துகிறேம்! நின் ஆன்மா சாந்தியுற இறைவனை மனதார வேண்டுகிறேம்.

வாழ்க நீ.

## தலைவர்களும் தொண்டர்களும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரியாதையை மறைந்த தலைவருக்கு செலுத்தினர். தமிழர் கூட்டணித் தலைவர்களும் ஊர்வலத்தில் நடந்துசென்றனர்.

மன்னர் சென். செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்ற துக்க பாடற் பூசையைத்தொடர்ந்து— மன்னர் பொதுமயானத்தில் அமரர் அழகக்கோனின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. மாதோட்ட மண்ணின் மாணிக்கத்தை நிலமகள் தன்னுடன் அணைத்துக்கொண்ட காட்சி பார்த்தோர் மனதை கவலைதாங்காமல் நெக்குருகச் செய்தது!

### தமிழ் ஈழம் துயரத்திலாழ்ந்தது

அமரர் அழகக்கோன் கொழும்பில் திடீரென மறைந்த செய்தி தமிழ் ஈழத்தின் மூலை முடுக்கெங்கும் எட்டியதும்—எங்கும் துயரம் ஆழ்ந்தது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை வவுனியா, அம்பாறை, ஆகிய தமிழ் மாவட்டங்கள் தோறும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. பூரண துக்கம் அனுட்டிக்கப்பட்டது. பல இடங்களில் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சித் தலைமைச்செயலகத்தில், தமிழரசுக்கட்சிக்கொடியும் தமிழர் கூட்டணி உதய சூரியன்கொடியும் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன.

## இதற்குப் பெயர்தான் 'திமிர்'!

பாண் கேட்ட மக்களிடம் பாணில்லாவிட்டாலென்ன—கேக் சாப்பிடுவதுதானே என்று கேட்டாளாம் திமிர்பிடித்த பிரெஞ்சு அரசி ஒருத்தி!

பாணுக்காக கியூவில் கால்கடுக்க நின்று யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் கஷ்டத்தை தேசிய அரசப் பேரவையில் உடுவில் பா. உ. வி. தருமலிங்கம் சுட்டிக் காட்டியபோது—பழைய பிரெஞ்சு இராணியின் பாணியில், "சத்தியாக்கிரகத்திலும், உண்ணுவிரதத்திலும் இருப்பதைவிட பாணுக்காக கியூவில் நிற்கலாமே...." என்று குறுக்கிட்டுக் கூறியிருக்கிருர் அரசாங்கஅமைச்சர் ஒருவர்!

அவர் வேறு யாருமல்ல — ரி. பி. இலங்கரத்தின அவர்கள்தான்.

"யாழ்ப்பாணத்தில் பாணுக்காக மக்கள் படும் அவதி சொல்லுந்தரமன்று. வேலைகளுக்குப் போகாமல்—மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் போகாமல் —காலையில் எழுந்தவுடன் பாண்வாங்குவதற்கு கியூவில் போய் நிற்கிருர்கள். அப்படி நின்ருலும் பாண் கிடைப்பதில்லை. கியூ ஒழிக்கப்படவேண்டும். இது மனித இனத்துக்கே ஒரு அவமானம்.

"அரசாங்கம், ஒரு புசல் நெல்லை ஒரு மில்லுக்கு கொடுத்து அதற்கு பதிலாக 14 கொடுத்து அரிசியை வாங்குவதுபோல—பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பேக்கரிகளுக்கு குறிப்பிட்டளவு மாவுக்கு குறிப்பிட்டளவு பாண் என்ற அடிப்படையில் மாவை கொடுத்து, பாணைப் பெற்று மக்களுக்கு வழங்கி, ஏன் மக்கள் கஷ்டத்தைப் போக்கக்கூடாது? கியூவை ஒழிக்கக்கூடாது?" என்று கேட்டார் தர்மலிங்கம்.

அப்போதே திரு. இலங்கரத்தின மேற்கண்டவாறுக குறுக்கிட்டுக்கூறினர்.

இதோ மற்றுமோர் சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு

நியூ மில்க்வைற் சோப்

உங்கள் ஆடைகளை ஆச்சரியப்படத் தக்க முறையில் சுத்தம் செய்கிறது.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு உயிரை விலையாக தரவும் தமிழ் இளைஞர் தயார்!'

## 50-வது நாள் உண்ணாவிரத முடிவில் அமிர்தலிங்கம் இலட்சிய முழக்கம்!

கொட்டும் மழைக்கு மத்தியிலும் கொள்கை வாதிகளான தமிழ் இளைஞர் பேரவையினர் சென்ற ஞாயிற்றுக் கிழமை யாழ் முனியப்பர் ஆலய முன்றலில் நடத்திய ஐம்பதாவது நாள் இறுதி உண்ணாவிரதத்தில் பெண்களும், சிறுவர்களு முட்பட சுமார் எண்ணூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு, பைந்தமிழ் உரிமைக்காக, பட்டினி கிடந்து தவமிருந்த காட்சி பார்ப்போர் உள்ளங்களையெல்லாம் உருக்குவதாயமைந்தது.

இந்த உண்ணாவிரதத்தை, மாலை 6 மணிக்கு பழரசம் வழங்கி முடித்து வைத்து — அங்கு உரையாற்றிய தமிழர் கூட்டணிப் பொதுச்செயலாளரும், தமிழரசுக்கட்சித் தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம், 'அண்ணா கூறியது போல உள்ள உயிர் ஒன்றுதான்; அது போகப்போவதும் ஒரு தடவை தான்; அந்த உயிரை இன விடுதலைக்காக விடவேண்டுமானால், அதற்கும் தயாராக இருப்போம்' என்று உணர்ச்சிப் பெருக்குடன் முழக்கமிட்டார்.

இதற்கு முன்னர், மஞ்சள், சிகப்பு ஆகிய இரு வண்ணங்களைக்கொண்ட தமிழ் இளைஞர் பேரவையின் புதிய கொடியை இளைப்பாறிய நீதியரசர் திரு. எஸ். தம்பித்துரை முதன் முதலாக அங்கு ஏற்றி வைத்தார்.

தமிழ் இளைஞர் பேரவையின் இலட்சியத்திலுள்ள புனிதத்தையும், அவர்கள் கொட்டவிருக்கும் தியாக இரத்தத்தையும் எடுத்துக் காட்டும் அந்தக்கொடி

தமிழர் கூட்டணி இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. ச. ஞானமூர்த்தியும் இந்த உண்ணாவிரதத்தில் பங்குகொண்டிருந்தார்.

சிறுவர்கள் பலர் இந்த உண்ணாவிரதத்தில் ஆர்வத்துடன் பங்குகொண்டிருந்த காட்சி கண்களில் நீரை வருவித்தது. சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினத்தின், எட்டு வயது மகன் சண்முகநாதன், சிறையிலிருக்கும் மாவை சேனாதிராசாவின் பத்து வயதுச் சகோதரி, ஆகியோருட்பட பல சிறுவர்களும் சிறுமிகளும் இதில் கலந்துகொண்டு கடைசிமட்டும் சோர்வின்றி இருந்தனர்.

திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மலையகம் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் இளைஞர் பேரவைப் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் வந்து இந்த இறுதி உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இன எழுச்சிக் கீதங்கள், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்கள், பக்திப் பாடல்களுடன் உற்சாகமாக நடைபெற்ற இந்த

## கொட்டும் மழையிலும் குலையாத உறுதியுடன் இலட்சியம் காத்தனர் இளைஞர் பேரவையினர்!

விண்ணில் ஆடி அசைந்த காட்சி புல்லரிக்க வைப்பதாக இருந்தது.

தமிழ் இளைஞர் பேரவையின் 50வது நாள் இறுதி உண்ணாவிரதம் — 25-11-73 ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலய முன்றலில் தமிழர் கூட்டணி தேசிய கீதத்துடன் தொடங்கியது. இதே இடத்திலேயே இந்த உண்ணாவிரத இயக்கம் செப்டம்பர் 11ல் தொடங்கப்பட்டது தெரிந்ததே.

காலை 6 மணி முதல் — மாலை 6 மணி வரை நடைபெற்ற இந்த 12 மணி நேர உண்ணாவிரதத்தில் — ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 800க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

காலரா கெடுபிடியும், உணவுநெருக்கடியும் இன்னும் பல்வேறு தொல்லைகளும் யாழ் மக்களை வாட்டி வதைத்தும், இவ்வளவு தொகையானோர் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டது பாராட்டப்பட வேண்டிய செயல் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

இந்த உண்ணாவிரதத்தில், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி இராசபூபதி அருணாசலம், கலாநிதி தேவா, செல்வி புஷ்பராணி, திருமதி வி. தர்மலிங்கம், ஆகியோருடன் இப்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் அன்னையர் பலரும், இன்னும் நூற்றுக்கணக்கான பெண்களும் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தின் போது, வருண பகவான் வந்து சோதனை நடத்தியும், யாரும் அசைந்துகொடுக்காமல் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தெப்பமாக நனைந்த நிலையிலும் உண்ணாவிரதம் இருந்தனர்.

மாலை 6 மணிக்கு உண்ணாவிரதத்தை திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பழரசம் வழங்கி முடித்து வைத்தபின்னர்—, தமிழ் இளைஞர் பேரவைக்கொடியை எஸ். தம்பித்துரை அவர்கள் பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஏற்றிவைத்தார். திரு. வரதராசா தலைமையில் கருத்தரங்கு ஆரம்பமானது.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த வழக்கறிஞர் தா. சங்கரப்பிள்ளை, வழக்கறிஞர் இ. விசுவநாதன், திரு. தம்பு கந்தையா எம். எம். சி. ஆகியோர் உரையாற்றிய பின்னர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

''குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதுதான் வழக்கம், ஆனால் இந்த அரசாங்கம் குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் தமிழ் இளைஞர்களை அடைத்து வைத்திருக்கிறது. அவர்கள் குற்றம் புரிந்திருப்பார்களே யானால் விடுதலை செய்யுமாறு நாம் கேட்கமாட்டோம். அந்த இளைஞர்களில் வழக்குத்தொடர்வதற்கு ஆதாரம் எதுவும் இல்லையென தெரிந்த பின்பும் கூட விடுதலை செய்யாமல் அடைத்து வைத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் ஒரு தாயின் மனோ உணர்ச்சியுடன் பிர



தமர் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்டார். ஏன் அவர் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து உண்மையை வலியுறுத்தக்கூடாது?

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்தவர்கள் என சிங்கள இளைஞர்கள் சிறையிலிருந்த சமயம் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார்கள். ஒரு பரீட்சார்த்தி 'கொம்பாஸ்பெட்டி' இல்லை என்று பரீட்சை மண்டபத்தில் சொன்னபோது அதனை உடனே வாங்கிவர ஜீப் வண்டி பறந்தது. ஆனால் நீர் கொழும்புச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் வாலிபர்களுக்கோ பரீட்சை எழுத அனுமதி மறுக்கப்பட்டது. தமிழருக்கு ஒரு நீதி. சிங்களவருக்கு இன்னொரு நீதி. இந்த அநீதியை தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணாவிரத இயக்கம் உணர வைக்கிறது.

இன்று என்ன நடக்கிறது? உணவுப் பஞ்சம் வந்தால் அது தமிழனைத்தான் பாதிக்கிறது. காலராவும் தமிழனையே பாதிக்கச் செய்கிறது. கொழும்பில் அரசாங்கம் நியாய விலைக்கு அரிசியை வழங்குகிறது இங்கு நியாய விலை அரிசியும் கிடையாது. கிளிநொச்சிப் பகுதியில் இருந்து அரிசி கொண்டு வரவும் தடை. இதனால் படி ரூபா 7-50 சதத்துக்குப் போய்விட்டது. யாழ். மாவட்டத்தில் அரிசி விளையும பகுதிகளில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு அரிசி கிடைக்காமல் தடுக்க இரண்டு தடை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனையிறவுத் தடையை எலிகூடத் தாண்டமுடியாது. பொலிசாரும் மற்றவர்களும் ஆயிரக்கணக்கில 'சம்திங்' 'திம்திங்' கேட்கிறார்கள் அவர்களைச் சமாளித்து இங்கு கொண்டுவரப்படும் அரிசியை ரூபா 7.50 சதத்துக்குக் குறைவாக எப்படி ஏற்க முடியும். இங்கு அரிசி விலையேறுவதற்கு அரசாங்கத்தின் செயலே காரணமாகும்.

பிரதமர் யாழ்ப்பாணம் வரப்போகிறார் என அறிந்ததும் அவரை முந்திக்கொண்டு காலரா யாழ்ப்பாணம் வந்துவிட்டது. பிரதமரிலும்தான் சக்தி குறைந்தவனல்ல என்பதை அது இங்கு காட்டிவிட்டது.

காலராவை உங்கள் மக்கள்தான் கொண்டுவந்தார்கள். அவர்களே அதை அனுபவிக்கட்டும், எங்கள் மக்களுக்கு வேண்டாம் என நிதிமந்திரி பாராளுமன்றத்தில் திரு. தர்மலிங்கம் எம். பி. யைப் பார்த்துக்கூறினார். சிங்கள மக்கள் மட்டுமே தங்கள் மக்கள் என்கிறார் அவர். அப்படியானால் அவர் தமிழருக்கு நிதிமந்திரியாக இல்லையா?

அரசாங்கம் ஒவ்வொரு துறையிலும் பாரபட்சம் காட்டுகிறது. அதிலும் காலராவைச் சாட்டாக வைத்து தமிழ் மக்களை அரசாங்கம் வாட்டி வதைக்கிறது. அகப்பை பிடிப்பவன் தன் ஆள் என்றால் இப்படியெல்லாம் நடக்காது. பிரதமரோ நிதி மந்திரியோ எங்களுக்கு அகப்பை பிடிக்கவேண்டியதில்லை.

தமிழ் இளைஞர் பேரவை தமிழினத்தின் எதிர்கால விடுதலைப்படையாக விளங்கப்போகிறது.

உயிர் ஒன்றுதான். அது ஒருமுறைதான் போகும். அந்த உயிரை இனவிடுதலைக்காக விடவேண்டுமானால் அதற்குத் தயாராக இருப்போம். இந்த உணர்ச்சியுடன் இயக்கத்தை நடத்துவோம்.''

## பெண்களும் பெருமளவு பங்கேற்பு! இருவர்ணக்கொடி உயரப் பறந்தது!

### உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்

தமிழ் இளைஞர் பேரவையினர் இம்மாதம் 25ம் திகதி பிரமாண்டமான முறையில் நடாத்திய 50வது நாள் உண்ணாவிரதத்தில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினரும் கலந்துகொண்டனர். இதற்குரிய அனுமதியை தமிழ் இளைஞர் பேரவையிடம் மன்றப் பொதுச்செயலாளர் ந. இராசதுரை பெற்றிருந்தார்.

இது சம்பந்தமாக மன்றத் தலைவரும் சட்டக்கல்லூரி மாணவருமான திரு எஸ்.கே மகேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் ''இலங்கைத் தமிழர்களுடைய எந்த ஒரு கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்து விட்டு ஆட்சி புரியும் அரசினருக்கு தமிழர்களுடைய இதயக்குமுறலை எடுத்துக்காட்டு முகமாக சத்தியத்தை முன்னிறுத்தி தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து நடைபெற இருக்கும் இவ்வுண்ணாவிரதத்தில் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு அகிம்சை முறையில் தீர்வு காணவிழையும் நாம் கலந்து கொண்டதில் பெருமையும் பூரிப்பும் அடைகின்றோம்'' எனக்குறிப்பிட்டுள்ளார்.

---

### இளைஞர் பேரவைக்கு சங்கம் பாராட்டு

பெரியோர்கள், அரசியல் தலைவர்கள் முதலியோர் மாத்திரமன்றி இளைஞர்களும் இன்று தமிழர் விடுதலைப் போரில் முக்கிய பங்கினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'இதனை இதனால் இவன்
முடிக்குமென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்று பொய்யில் புலவன் திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப இளைஞர்களின் கையிலும் ஏற்ற பொறுப்பொன்று கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணாவிரதத்தில் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட எம்மால் நேரடியாகப் பங்குகொள்ள முடியாவிட்டாலும் தம்பி, தங்கையரின் போராட்டம் வெற்றிபெற எமது உள்ளங்கள் வாழ்த்திக் கொண்டேயிருக்கின்றன.

வாழ்க தமிழ் இளைஞர் பேரவை உண்ணாவிரதம்!

—இவ்வாறு அ. எ. வி. சங்கம் தமிழர் கூட்டணித் தலைவருக்கு அனுப்பியுள்ள செய்தில் குறிப்பிட்டுள்ளது.

## யாழ்ப்பா....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உதிர்க்கையில் ''அத்தியாவசிய உணவுப்பொருட்களான அரிசி, கோதுமைமா போன்றவற்றின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி மேன்மேலும் கஷ்டத்திற்குள் ஆழ்த்துவதையிட்டு நாம் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்'' என்றும் ''தொழிலாளி விவசாய நடுத்தர வறிய ஏழை மக்களை நெருக்கடிக்குள் மூழ்கடித்து சுமையைத் திணிப்பதை நாம் ஆதரியோம்'' என்றுப் கொக்கரித்தார்!

அவரது இப்பேச்சை 21—11—73 ஈழநாடு பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் படித்தேன். 'முதலாம் பக்கத்தில் அவரும், முத்தேட்டுக்கமவும் அரசாங்க 'பட்ஜட்'டை ஆதரித்து வாக்களித்த செய்தியையும் வாசித்தேன்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களிடையே நின்றுதொழிலாளர், விவசாயி என்ற பெயரைக் கூறி அரசாங்கத்தின் இறக்குமதியையும் விலைவாசி உயர்வையும் எதிர்த்த இந்த 'வீரர்கள்' மக்களை நசுக்கும் 'பட்ஜட்டை தேசியப் பேரவையில் ஆதரித்தார்கள்!

யாழ்ப்பாணத்தில் எதிர்த்ததை கொழும்பில் ஆதரித்த இவர்கள் அசல் பரத்தைகள் அல்லவா?

இவர்கள் தான் தமிழர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் நின்று பேசினார்கள்!

கம்யூனிஸ்ட் பரத்தைகளை தமிழ் மக்கள் இனியும் நம்பி ஏமாறமாட்டார்கள்!

—பிரம்மரிஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நின்று விலைவாசியை எதிர்த்து கூச்சல்!

## கொழும்பு வந்தவுடன் விலைவாசியை உயர்த்திய அரசுக்கு ஆதரவு!

## 'தீவிர' கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்ப வாதம்!

தமிழர்களின் தொண்டையை நெரிக்கும் புதிய அரசியல் சட்டத்தினை ஆதரித்து அரசாங்கத்தின் சிங்கள வெறியாட்டங்கள் அனைத்திற்கும் தாளம்போட்டு 'சோஷலிச பல்லவி' பாடி வந்த முதலாளி வர்க்க கம்யூனிஸ்ட் கட்சியினருக்குள்ளே (சோஷலிச) நாய்கடி, பூனைகடி ஏற்பட்டதால் கெனமன் கோஷ்டி, விக்கிரமசிங்கா கோஷ்டி தோன்றியதையும் கெனமன் கோஷ்டி விக்கிரமசிங்கா கோஷ்டியைவிட அரசாங்கத்தின் கால்களை வடிவாக நக்கியதால் விக்கிரமசிங்காவின், கோஷ்டியை அரசாங்கம் உதைத்துத் தள்ளியதையும் மக்கள் அனைவரும் அறிந்து இன்றும் கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருக்கின்றனர்!

அடிபட்டு ஓடிய நாய் தூர ஓடிப் போய்க் குரைப்பது வழக்கம். அதுபோல அரசின் உதைபட்டு விழுந்த விக்கிரமசிங்கா கோஷ்டி யாழ்ப்பாணத்திற்கு ஓடிப் போய் உரைக்கப்போகிறதாம். இவர்கள் வடபகுதிக்கு வந்து உரைப்பதாலும், குரைப்பதாலும் எமக்குக் கவலையில்லை.

### கழுதை ராகம்

ஆனல் இவர்கள் இங்கு வந்து தமிழர்களுக்குக் குறைகள் இருக்கின்றன. அரசாங்கம் அவற்றினைத் தீர்க்க வேண்டும். அல்லது அதற்காக எமது இயக்கம் போராடும் என்று புலுடாப்பண்ணி கழுதை ராகம் பாடி தமிழ் பேசும் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்பதை இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்.

சிங்கள வெறிபிடித்த அரசிற்குத் துதிபாடி தமிழ் மக்களின் கண்ணீரிலே நீச்சலடித்து சோஷலிசம் பேசிய இக்கோஷ்டியினர் இன்று அரசினல் அடிபட்ட பின்பு நாதியற்றவர்களாகி தாம் செய்த துரோகங்களை தமிழ் மக்கள் மறந்துவிடுவார்கள் என்ற எண்ணத்துடன் அவர்களை ஏமாற்ற மகாநாடு என்ற போர்வையில் புதிய வலை விரிக்கப் போகிருர்கள். இக்கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு வடபகுதிக்கு வந்த போது தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அப்போதுதான் பொருளாதாரமும், சோஷலிசமும் வளரும் என்ற வகையில் தும்பில்லாமல் கயிறு திரித்தார்.

### புரட்டு நாடகம்

இத்திரிபுவாதியின் கூற்றிலிருந்தும் விக்கிரம சிங்கா கோஷ்டியின் நடவடிக்கைகளிலிருந்தும் தமது கட்சிக்குப் பலமூட்ட தமிழ் மக்களை இழுக்கவே இப்புதிய பேச்சுத் தந்திரத்தைக்கையாளத் தொடங்குகிருர்கள் என்று நிச்சயமாக நம்பமுடிகிறது!

எனவே, விக்கிரமசிங்கா கோஷ்டி கம்யூனிஸ்டுகளின் மகாநாடு தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகத் தாம் உயிர் விடுவது போல் நடிக்கும் ஆள்சேர்க்கும் புரட்டு நாடகமே!

தமிழ் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்ட போது தமிழ் இளைஞர்கள்விசாரணையின்றி வெஞ்சிறையில் அடைபட்ட போது இன்னும் அரசின் எத்தனையோ கொடுமைகளை யெல்லாம் எதிர்த்து தமிழின விடுதலை வேட்கை கொண்ட தலைவர்கள் போராடினர்களே, புரட்டர்கள் இதுவரை எங்கே போயிருந்தார்கள்? தமிழ் மக்களை அநாதைகளாக்கும் அரசியல் சட்டத்திற்கு ஆதரவளித்து கையெழுத்திட்டகளிப்பிலே மூழ்கியிருந்தவர்களை இப்படி நாம் கேட்கக்கூடாதுதான்!

ஆனல், ஒன்று மட்டும் கேட்டுக்கொள்கிறோம் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக இன்று நீங்கள் புருஷன் செத்து ஆறு மாதத்தால் பெண்சாதி கண்ணீர் விட்டது போல் கண்ணீர் விடுகிறீர்கள்! இந்தக் கண்ணீர் மூலம் தமிழ் மக்களை உங்கள் பக்கம் கவர்ந்து, பின்பு அவர்களின் தோள்களில் இருந்து அவர்களது தொண்டையைக் கடிக்கலாம் என்ற சதிகளை தமிழ் மக்கள் இதுவரை கால அனுபவ மூலம் அறிவர். ஆதலால், அவர்களை உங்கள் புரட்டு மூலம் ஏமாற்ற நினைப்பது பகற்கனவு!

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து அரசாங்கத்துடன் கொஞ்சிக் குலாவி சுகபோகம் அனுபவித்த கம்யூனிஸ்டுகளை (விக்கிரமசிங்கா கோஷ்டி) அரசாங்கம் உதைத்துத் தள்ளிய பின்பு சமீபத்தில் அவர்கள் வடபகுதிக்கு வந்து தமிழர்களுக்காகக் குடம் குடமாகக் கண்ணீர் வடித்து தமிழர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என்று 'டுப்' விட்டிருக்கிருர்கள்.

அயோக்கியனுக்கு தான் பேசுவதைப் பற்றி மற்றவர்கள் கீழ்த்தரமாக நினைப்பார்களே என்ற ரோசம் இருக்காதாம். அந்த வகையில் விக்கிரமசிங்கா கம்யூனிஸ்டுகள் இப்படித்தான் பேசுவார்கள்!

இப்படி பரத்தைத் தனமாக மேற்படி கம்யூனிஸ்டுகள் யாழ்ப்பாணத்திலபேசிய கூட்டத்தில் அவர்களின் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா தனது கருத்தை

( 6 -ம் பக்கம் பார்க்க )

### சொன்னார்கள்!

தமிழ் மக்களுக்குமாநில சுயாட்சி தேவை. தமிழ் மக்களின் உணர்வுகளை — அபிலாஷைகளை பொருட்படுத்தத் தவறினல் — ஒரு பெரும் பிரச்சினையாக — தீர்க்க முடியாதபடி இது வளர்ச்சியடைந்து விடலாம்.

— சரத்முத்தெட்டுவேகம பா. உ.

என்னதான்சமாதானம் சொன்னலும், தமிழ் கடிதங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து தமிழில் பதில் கிடைப்பதில்லை. தட்டச்சு மொழிபெயர்ப்பாளர் பற்றுக்குறைதான் இதற்குக் காரணம் என்று சொல்வது தவறு. தமிழில் பதிலளிக்கவேண்டும்என்ற முக்கியத்துவத்தை அரசு உணராததே இதற்குக் காரணம்.

— கே. பி. சில்வா

சோசலிசம் என்ற சீனி மிட்டாயைக் காட்டி மக்களை மேலும் ஏமாற்றமுடியாது.

—திருமதி. நந்தாட் சில்வா

அரசாங்கம், அடுத்த தேர்தலிலும் யூ. என். பி. படுதோல்வி அடையும் எனத்தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறது.

— கே. பி. சில்வா

தமிழ் மொழியையும், தமிழ் கலாச்சாரத்தையும் சிங்கள மக்கள் மதிக்காத வரை — நாட்டில் தேசிய ஐக்கியம் ஏற்படவே முடியாது! சிறுபான்மை பிரச்சினைகள் யாவும் சரியான முறையில் தீர்க்கப்பட்டதால்தான் சோவியத்யூனியன் ஒருசக்திமிக்கநாடாக மிளிர முடிந்தது.

—டாக்டர் விக்கிரமசிங்க.

பணம் எங்கிருக்கிறது எனக்கண்டு பிடிக்க எனக்குத் தெரியும் என நிதிய மைச்சர் அன்று கூறினர். அவருக்கு இப்போது தெரிவதெல்லாம், யாழ்ப்பாணத்து ஏழைக் கமக்காரரின் மடியில் இருக்கும் இரண்டு துட்டுப் பணமேயாகும்.

— திருமதி நந்தாட் சில்வா,

(யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரைகளிலிருந்து — ஆதாரம், 20 21—11—73 ஈழநாடு, வீரகேசரி)

## "சுயாட்சிக் கழகத்திலிருந்து ஏன் வெளியேறுகிறோம்?"

அண்மையில் தமிழர் சுயாட்சிக்கழகத்திலிருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியில் மீண்டும் சேர்ந்துள்ள புங்குடுதீவு சுயாட்சிக்கழகக் கிளை செயலாளர் திரு. எஸ். மகேந்திரனும் ஏனையோரும், சுயாட்சிக் கழகத்தலைவருக்கு அனுப்பியிருந்த ராஜினமா கடிதம் வருமாறு:-

ஈழம்வாழ் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண உரிமைகொண்ட 'சுயாட்சி' அரசமைப்பை நிறுவுவதன் மூலமே தம்முடைய தனித்துவத்தையும், சுயாதிபத்தியத்தையும் காப்பாற்றமுடியுமென்ற சீரிய கொள்கையால் உந்தப்பட்ட நாங்கள் அதே கொள்கையை எடுத்துக் கூறிய தங்கள் இயக்கத்தில் அங்கத்துவம் வகித்துவந்தோம். அந்த மகோன்னத இலட்சியத்தை அடைவதற்காக எமது சேவையை எந்தச் சந்தர்ப்பத்திலும் தரத் தயாராக இருந்தோம்.

இதே இலட்சியத்தை முன்வைத்து கடந்த தேர்தலில் போட்டியிட்டோமாயினும் தேர்தலுக்குப்பின் கழகத்தின் இயக்கம் குன்றியேயுள்ளது. இந்நேரத்தில்9.9.73ல் நடந்துமுடிந்த தமிழரசுக் கட்சி மாநில மகாநாட்டில் சுயாட்சிக் கொள்கை கட்சிக்கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை கவனிக்குமிடத்து இலங்கைத் தமிழர்களின் பெரும்பான்மையோரின் நம்பிக்கையான ஆதரவைப்பெற்ற தமிழரசுக்கட்சியின் மூலம் தமிழர்களுக்குச் சுயாட்சி காண உழைக்கக்கூடிய பொற்காலம் தோன்றியுள்ளதை உணரமுடிகின்றது இதை எவரும் மறுக்கமுடியாது.

இந்த உணர்வின் பிரதிபலனக கட்சியுடன் தாங்கள் இணையவேண்டுமென்ற எமது கருத்தினை தங்களிடம் வற்புறுத்தினேம். ஆனல் துரதிர்ஷ்டவசமாக தாங்கள் எமது கோரிக்கைக்குச் செவி சாய்க்காது விட்டுவிட்டீர்கள். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களைப் பாராது இனநலன்கருதி நாம் இணைய வேண்டுமென்ற நியாயமான கருத்தினைத் தாங்கள் ஏற்க மறுத்தது மிகவும் விசனத்துக்குரியது.

இந்நிலையில் இனநலன் கருதியும், தமிழினத்திற்குச் சுயாட்சி காணத்துடிக்கும் ஆயிரமாயிரம் தமிழ் இதயங்களின் உணர்ச்சிக்குத் தலைவணங்கியும் தங்கள் இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை மிக்க மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

### சு. கழகத்திலிருந்து வெளியேறியதற்கு பாராட்டு!

சுயாட்சிக் கழகத்திலிருந்து சட்டக்கல்லூரி மாணவர் திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில் பலர் வெளியேறியதைப் பாராட்டிக் கொழும்பு, நீர் கொழும்பு, மாவத்தகம, சீதுவை, மன்னர் ஆகிய இடங்களிலிருந்து கடிதங்களும் தந்திச்செய்திகளும் வந்துள்ளன.

கொழும்பு அருள் நெறி மன்றச் செயலாளர் திரு. நா. ம. சிவசாமி திரு மகேந்திரனுக்கு அனுப்பியுள்ள செய்தியில் "தமிழர் கூட்டணியில் சேராமலும் தமது இயக்கத்தை செயல்படுத்த முனையாமலும் சந்தர்ப்பவாதக் கொள்கையை கையாளும் தலைவர்களை செல்லாக்காசாக்க உழைப்போம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உண்மையா?

'வட பகுதியில் முருகையா என்று கூறப்படும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் ஒருவர் சுடப்பட்டார் என்று கேள்விப்பட்டதும், கொழும்பிலுள்ள சுதந்திரக்கட்சி — ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தமிழ் பிரமுகர்கள் சிலர், இலங்கை விமானப்படையைச்சேர்ந்த ஒரு விசேட விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு ஓடிச்சென்றது உண்மையா?

'கொழும்பிலுள்ள இந்த தமிழ் பிரமுகர்களுக்கு, தமிழர் கூட்டணியினல் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட அரசியல் பின்னணியுடன் கூடிய கொலை முயற்சி இது என்று தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டதா?

'கொழும்புக் குழு யாழ்ப்பாணத்தை அடையும்போது —முருகையா கொலை முயற்சி சம்பவம் முழுக்க முழுக்க தனிப்பட்ட விஷயம் என்றும், தமிழர் கூட்டணியினதோ — முருகையாவினதோ அரசியலுடன் எவ்வித தொடர்பும் அற்றதென்றும் பொலிசார் கண்டு பிடித்து விட்டார்களா?

'அரசியல் [illegible] யவர் முருகையா என்று ஒரு சில விஷமிகள் பரப்பிய பொய்க்கதையை தோலுரித்துக் காட்டும் விதத்தில், உடனடியாக விசாரணை நடத்தி உண்மையை கண்டு பிடித்த பொலிசார் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள் தானு?

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பிரமுகர் கோஷ்டி விமானத்திலிருக்கும் போதே, கொழும்பிலிருக்கும் மேலதிகாரிகளுடன் தொடர்வு கொண்டு உண்மையான காரணத்தை அறிவித்ததற்காகவும் பொலிசா பாராட்டப்படவேண் வேண்டியவர்களா?

யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கியதும்தான் — அங்கு சென்ற தூதுக்குழுவினர் தாம் ஒரு சவாரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தார்களா?

'இன்று இருக்கின்ற கஷ்டமான பிரச்சினை — இந்த குறிப்பிட்ட விமானச்சவாரிக்குரிய செலவை யார்தாங்குவது என்பதா?

'ஹெலிடூர்ஸ்' என்ற தனது வர்த்தகப் பகுதி மூலம், இத்தகைய தனிப்பட்ட விமானச் சவாரிகளுக்கு விமானப்படை நியாயமான தொகையை விதிப்பது உண்டா?

'பலரின் கருத்துப்படி— பிரச்சினைக்குரிய இத்தமிழ்த் தூதுக்குழு இந்த விமானச் சவாரிக்குரிய செலவை கட்டவே வேண்டுமா?

'அமைச்சு ஆசீர்வாதம் இந்தத் தூதுக்குழுவுக்கு இருப்பதானது — இவ்விமானச் சவாரிக்குரியசெலவை வரி செலுத்துவோரிடமிருந்து அறவிடுதற்கு ஒரு சாட்டாக அமையக்கூடாது?

'இந்த முருகையா சம்பவம்— யாழ்ப்பாணத்திலுள்ள சுதந்திரக் கட்சி — ஐக்கிய முன்னணித் தமிழ்ப் பிரமுகர்கள் — தனிப்பட்ட குடி மக்களுடன், தனிப்பட்ட காரியங்களில் எவ்விதம் நடந்துகொள்ளுகிருர்கள் என்பதை கண்டு கொள்ள வெளிச்சம் போட்டுக் காட்டுமா?

'இத்தகைய பல ஐக்கிய முன்னணி பிரமுகர்கள்—சரியான கொடியைப் பிடிப்பதால், தாங்கள் விசேட சலுகை பெறமுடியும என்று நம்புகிருர்களா?

'இந்த சம்பவத்திலாவது, இதுபோன்ற அரசியல் தினுசு முனைவுகள் வெற்றி பெறுமற் போவது நல்லதல்லவா?'

(ட்றிபியூன்—27-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் என்றும் ஆண்களுக்கு
அடிமைகள் அல்ல
தாலிகட்டி வேலிபோட்டு
பிள்ளைபெறும் கருவியாக
எங்களை நடத்தும்
இவ் ஆண்குலத்தின் மமதையை
அடக்குவோம். அவள் கூற்று!

அடுத்தவரை மதிப்பதுதான்
அடக்கம் என்ற உலகம்.
கன்னி என்னும் பருவ நதி
கலியாணத்தில் முடிந்து
குழந்தை பெறும்
தாய்மையில் தான்
பெண்மை முழுமை பெறுகிறது. அவன் கூற்று;

யார் கூற்று சரியானது, உங்கள் முடிவு எப்படியிருக்கும். நீங்கள் சரியா!
அல்லது உங்கள் நண்பர் சரியா! தர்க்கம் வேண்டாம் இன்றே பாருங்கள்!

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) **பிளாசா** (வெள்ளவத்தை) **வின்சர்** (யாழ் நகர்)

ஜெய்சங்கர் பாரதி சோ M.R.R. வாசு சீனிவாசன் மனோரமா நடித்த

# உனக்கும் எனக்கும்

விரைவில் கெயிட்டி திரையில் **நவாப் நாற்காலி**

## 2வது மாதம்

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ஜோதி** (திருகோணமலை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி — 10.30—2.30—6.00—9.30 மணி — 6.30—9.30 ஞாயிறு காலை 10மணி

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!

தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!

**இக்கதையின் முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்!**

சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!

ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—

# பெத்த மனம் பித்து

(பாஸ்கள் ரத்து)



## 6-வது வாரம்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **வெலிங்டன்** (யாழ்நகர்)

ஜெமினி, ஜெயந்தி, நாகேஷ்,
முத்துராமன், M. R. R. வாசு,
சுந்தரராஜன் A. சகுந்தலா
நடித்த—

கே. பாலச்சந்தரின்

# புன்னகை

இது ஒரு வழக்கமான கதையல்ல
வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும்
நால்வரின் குணதிசயங்களை
விமர்சிக்கும் ஒரு கட்டுரை...
**முதன் முதலாக**
ஒரு திரைப்படமாக வந்திருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1973ம் வருடம் டிசம்பர் மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.